**இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் - 2022**

-----------------------------------------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய

பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை

எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கொடுப்பனவு வவுச்சர்களை கணக்கீடு செய்யும் சந்தர்ப்பத்திலேயே உரிய செலவுகளை சரியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்வதற்குப் பதிலாக அலுவலக உபகரணங்கள் மற்றும் இயந்திர உதிரிப் பாகங்கள் போன்ற சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், மூலப் பொருட்கள் மற்றும் பொதிசெய்த பொருட்களை கொள்வனவு செய்தல், நலன்புரி மற்றும் கட்டிட பராமரிப்பு பொருட்களைக் கொள்வனவு செய்தல், முதலியவற்றிற்காக ஆண்டு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட ரூபா 59,857,724 செலவுகள் எழுதுகருவிகள் கணக்கிற்கு வரவு வைத்து ஆண்டின் இறுதியின் நாட்குறிப்புக்களின் மூலம் உரிய கணக்குகளுக்கு மாற்றப்பட்டிருந்தது. | சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் சரியானவை மற்றும் 2024 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து எழுதுகருவி களஞ்சியம் மற்றும் இயந்திர உதிரிப்பாகங்கள் களஞ்சியம் என்பவற்றினை கணனி பெக்கேஜில் தனித்தனியாகப் பேணுவதற்கு களஞ்சிய பொறுப்பாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செலவு விடயங்களை அடையாளங்காணக் கூடிய வகையில் குறியீட்டு இலக்க முறைமையினைப் பயன்படுத்தி கொடுப்பனசுவு வவுச்சர்களைத் தயாரிக்கின்ற சந்தர்ப்பத்திலேயே உரிய செலவுகளை சரியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்வதற்காக தேவையான கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டிலிருந்து வங்கிக் கணக்கிணக்க கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 224,168 தொகையினையும் உள்ளடக்கி 02 வங்கி கணக்குகளுக்கு நேரடியாகக் கிடைத்திருந்த ஒரு ஆண்டிற்கும் மேற்பட்ட பழைமையான ரூபா 2,282,675 பணம் மற்றும் காசோலைகளை உறுதியாக இனங்கண்டு ஏடுகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணக்கூடிய நேரடியாக வங்கிக்கு கிடைத்த மீதிகளை இனங்காண்பதற்கும் மிகுதியானவைகளை ஏனைய வருமானமாக கணக்கீடு செய்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் சரிசெய்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளின் பிழைகளை சரிசெய்வதற்கும் செம்மையாக்கல் மேற்கொள்வதற்கு மற்றும் முற்பணங்களைத் தீர்த்துவைப்பதற்குத் தயாரிக்கப்பட்ட மொத்தமாக ரூபா 2,090,700,289 தொகையான 1438 நாட்குறிப்பு வவுச்சர்கள் பொறுப்புக்கூற வேண்டிய ஒரு உத்தியோகத்தரினால் பரீட்சித்துப்பார்த்து அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது . அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் சரிசெய்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணனிமயப்படுத்தப்பட்ட மொத்தமாக ரூபா 151,744,869 தொகையான 36 நாட்குறிப்புக்கள் பின்னர் இரத்துச் செய்யப்பட்டிருந்தும் அந்த நாட்குறிப்பு வவுச்சர்களைத் தயாரிக்கும் போது அதேபோல இரத்துச் செய்யும் போது பொறுப்புக்கூற வேண்டிய ஒரு உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் இரத்துச் செய்யப்பட்டது என்பதற்கு எந்த பதிவும் நாட்குறிப்பு வவுச்சர்கள் மீது வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | புதிய மின்சாரத்தினைப் பகிர்ந்தளிக்கும் முறைமை தொடர்பான காலக்கழிவு ரூபா 1,148,002 தொகை, கட்டிட பெறுமானத் தேய்வு ரூபா 916,212 தொகை, வாகன பெறுமானத் தேய்வு ரூபா 196,395 தொகை என்பன குறைத்தும் பதிவேட்டுப் பொருட்களின் பெறுமானத் தேய்வு ரூபா 25,891 அதிகரித்தும் மீளாய்வாண்டிற்கான பெறுமானத் தேய்வினையும் காலக்கழிவினையும் கணக்கீடு செய்வது தொடர்பாக நாட்குறிப்பு வவுச்சர்களை தயாரிக்கும் போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை சமர்ப்பிப்பதற்கு முன்னர் சரிசெய்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட உற்பத்திக் கணக்குகளின் பிரகாரம் உற்பத்திக் கிரயம் ரூபா 726,151,032 ஆக இருந்த போதிலும் அலகு உற்பத்திக் கிரயத்தின் அடிப்படையில் காலாண்டு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட உற்பத்திக் கிரய அறிக்கையின் பிரகாரம் மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 495,632,070 ஆக இருந்ததனால் வித்தியாசம் ரூபா 230,518,961 ஆகும். இக்கிரய முரணைப் பரீட்சித்து உரிய செம்மையாக்கல்கள மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தமாக காணப்படுகின்ற முரண்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தி சரியான கணக்குத் தகவல்களை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உற்பத்திக் கணக்குகளின் பிரகாரம் இனங்காணப்பட்ட உள்ளபடியான உற்பத்திக்கிரயம் மொத்த உற்பத்தி அலகின் எண்ணிக்கையால் உள்ளீர்க்கப்பட்டுள்ளன எனக் கருதி அதனை அடிப்படையாகக் கொண்டு அலகு உற்பத்திக்கிரயம் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். இக்கிரய முரண்பாடுகளைப் பரீட்சித்து உரிய செம்மையாக்கல்களைச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 1 இல் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | நியமத்தின் 32 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்கத்தின் மானியமாக மீளாய்வாண்டு வரை கிடைத்த மொத்தமாக ரூபா 304,227,234 தொகையான நிலையான சொத்துக்களுக்குரிய ரூபா 19,487,730 ஆன மீளாய்வாண்டின் காலக்கழிவுத் தொகையானது பிற்போட்ட வருமானமாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான மொத்த பெறுமானத் தேய்விற்கான ஒதுக்கீட்டுத் தொகையான ரூபா 57,091,291 இற்கு காலக்கழிவுத் தொகையினை எதிரீடு செய்து தேறிய வித்தியாசம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | ஐயவினாவுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளைத் தயாரிக்கும் போது சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | புதிய 10 ஆயுர்வேத உற்பத்திப் பொருட்களை திறந்த சந்தையில் அறிமுகப்படுத்துதல் மற்றும் பிரசித்தப்படுத்தும் செயற்திட்டத்திற்காக தேசிய மருந்துகள் அபிவிருத்தி நிதியத்தினால் 2015 மே 26 ஆந் திகதி ரூபா 15,000,000 மானியம் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் இப்பண மானியமானது நியமத்தின் 88 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு வருமானமாக முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் பிழையான நடைமுறைப்பொறுப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | நிறுவனத்தில் காணப்படுகின்ற தகவல்களின் பிரகாரம் இந்த ரூபா 15 மில்லியனை மீண்டும் செலுத்த வேண்டிய ஒரு பொறுப்பாக இல்லையாயின் ஒரு மானியமா என்பதனை உறுதிப்படுத்த முடியாததனால் நடைமுறைப் பொறுப்பாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பின்வரும் அவதானிப்புக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த இறுதி இருப்புக்களின் பெறுமதி இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இல் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க இனங்காணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (i) | கூட்டுத்தாபனத்தின் 03 களஞ்சியங்கள் மற்றும் நாடு முழுவதும் அமைந்துள்ள 17 மருந்துக் கடைகளில் காணப்பட்ட பூர்த்தியான இருப்புக்கள் சம்பந்தமாக நியமத்தின் 25 ஆம் பந்தியின் பிரகாரம் முதலில் பெற்றவைகளை முதலில் | இச்சிக்கலினைத் தவிர்த்துக்கொள்வதற்காக அனைத்து விற்பனை நிலையங்களையும் இணையவழிப்படுத்தி | நியமத்தின் பிரகாரம் முதலில் பெற்றவைகளை முதலில் வழங்குதல் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்படுதல் முறைமைக்கு இருப்பு பேரேடு பேணப்பட்டிருந்தும் அந்த இருப்பு பேரேடுகளின் அலகு விலை மற்றும் பெறுமதி நிரல்கள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. நியமத்தின் 27 மற்றும் 28 ஆம் பந்திகளின் பிரகாரம் இருப்பு பேரேட்டினை சரியாகப் பேணி இலகுவாகக் கிடைக்கின்ற மிகுதி இருப்பு பெறுமதியை நிகர தேறக்கூடிய பெறுமதியுடன் ஒப்பீடு செய்து அதில் குறைந்த பெறுமதி ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களுக்கு ஈடுபடுத்துவதற்குப் பதிலாக இருப்புப் பேரேட்டின் மிகுதி அலகு எண்ணிக்கையை மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்திக் கிரயத்தினால் பெருக்கி 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மிகுதி பூர்த்தியான மருந்து இருப்பின் பெறுமதி ரூபா 177,928,072 ஆக கணிக்கப்பட்டு கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் பூர்த்தியான மருந்து இருப்பு பேரேடு முதலில் பெற்றவைகளை முதலில் வழங்குதல் முறைமையான மருந்து இருப்பு சராசரி கிரய முறைமையினை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டது என்பதனை பிழையான கூற்று நிதிக்கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | புதிய கணனி பெக்கேஜினை அறிமுகப்படுத்துவதற்கு உரிய பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் எதிர்காலத்தில் இச்சிக்கல் உருவாக மாட்டாது. | முறைமை அல்லது சராசரி முறைமை ஆகிய கிரய சூத்திரங்களில் ஒன்றினை தொடர்ச்சியாக பின்பற்றி இருப்பு பேரேடுகளில் அலகு விலை மற்றும் பெறுமதி நிரல் நாளதுவரைய ாக்கப்பட வேண்டியதுட ன் அதன் அடிப்படையில் வழங்கப்பட்ட இருப்புக்களின் கிரயம் மற்றும் ஆண்டின் இறுதியிலுள்ள மிகுதி இருப்புக்களின் கிரயம் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். கணனி இல்லாத பிரிவுகளில் இருப்பு பேரேட்டுப் புத்தகம் பேணப்படுதல் வேண்டும். |
| (ii) | கணக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபா ரூபா 96,125,058 தொகையான மூலப்பொருள் இருப்பு, ரூபா 177,928,072 தொகையான பூர்த்தியான பொருள் இருப்பு மற்றும் ரூபா 39,356,268 தொகையான பொதிசெய்யப்பட்ட பொருள் இருப்பு ஆகிய இருப்புக்கள் சம்பந்தமாக பௌதீக இருப்புக்கள் மீள்கணிப்புச் செய்யப்படுகின்ற காலப்பகுதிக்குள் இருப்பு அசைவு செயற்பாட்டினை நிறுத்துவதற்கு அல்லது செயற்பாட்டு நடைமுறைகளின் போது | வருடாந்த இருப்பு மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற காலத்தின் போது பொருட்களை வழங்குதல் மற்றும் பொறுப்பேற்றல் மேற்கொள்ளப்படாதிருப் பதற்கு 2023 ஆம் ஆண்டிலிருந்து | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கூறிய கால எல்லைக்குள் அசையக்கூடிய இருப்புக்களின் அளவினை மதிப்பீட்டின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்து வைப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் வழக்கமான செயற்பாட்டு நடைமுறை பேணப்பட்டு வந்த அதேவேளை பௌதீக இருப்பினை மீள் கணிப்புச் செய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க ஒவ்வொரு பொருளுக்குமுரிய பௌதீக இருப்பின் மீள்கணிப்பு கால எல்லைக்குள் இருப்புக்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் இருப்புக்களை வழங்குதல் பௌதீக இருப்பு மீளாய்வு அறிக்கைகளிலுள்ள மீதிகளுக்கு செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டது என்பதற்கான சான்றுகள் இருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | இருப்புக்களின் மீள் கணிப்பின் போது ரூபா 1,294.13 தொகையான 750 மில்லிலீற்றர் உடைவு முறிவு எண்ணைப் போத்தலின் அலகு கிரயம் ரூபா 129,413 ஆகக் காட்டியதன் காரணமாக 203 போத்தல்களின் கிரயம் ரூபா 26,008,131 தொகையினாலும் 100 மில்லிலீற்றர் தேன் 9665 போத்தல்கள் மிகையாக கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 1,609,264 அதொகையினாலும் 1098 கிலோகிராம் பாஸ்கர லவன மிகையாகக் கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 1,034,847 தொகையினாலும் மூலப்பொருள் களஞ்சியத்தில் இல்லாதிருந்த 03 மருந்துகள் மிகையாக கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 120,508 தொகையினாலும் ஆக ரூபா 28,772,750 தொகையால் இறுதி இருப்பு மிகையாகக் காட்டப்பட்டிருந்ததுடன் நாவின்ன விற்பனை கடைகளில் காணப்பட்ட 189 உற்பத்திப் பொருட்களுக்குரிய 8673 அலகு இருப்புக்களின் மீள் கணிப்பீட்டின் போது விட்டு விடுதல்களின் காரணமாக ரூபா 1,975,542 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. இவ்விடயத்தினை 2023 கணக்காண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | வருடாந்த இருப்பு அறிக்கையின் பிரகாரம் களஞ்சிய இலக்கம் 14 இல் காணப்பட்ட பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய கட்டிடப் பொருட்கள், மின்சார உபகரணங்களும் துணைக்கருவிகளும், இயந்திர உபகரணங்கள், உதிரிப்பாகங்கள், நீர்க்குழாய் துணைக்கருவிகள் மற்றும் 284 வகையான ஏனைய பொருட்களின் 2234 அலகுகள் மற்றும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத 285 அலகுகளும் | ஐயவினாவுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. கணனி பெக்கேஜில் இருப்புகள் பெறுமதி அற்ற அளவினைக் கொண்டு காணப்படுவதனால் அத்தகவல்களை சரியாக கணக்கீடு | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருப்புக்களை கணக்கீடு செய்யும் போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செய்வதற்கு உரிய களஞ்சிய, உத்தியோகத்தர்கள் மற்றும் பொறுப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இல் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் மூடப்பட்ட 07 நிலையான வைப்புக்களுல் பணப் பெறுவனவுகள் ரூபா 254,054,982 மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட 05 நிலையான வைப்புக்களில் ரூபா 175,000,000 பணத்தை ஈடுபடுத்துதல் மேற்கூறிய நியமத்தின் 21 ஆம் பந்தியின் பிரகாரம் தனித்தனியாக காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் அறிக்கையிட்டு பெறவேண்டிய வட்டியை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் மெய்மையாக்குவதற்குப் பதிலாக நிகர அடிப்படையில் காசு உட்பாய்சலாக அறிக்கையிடப்பட்டிருந்து. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. இந்த விடயம் 2023 கணக்காய்வாண்டிலிருந்து காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக வழங்குனர்களுக்கு பணத்தை செலுத்துதல் மேற்கூறிய நியமத்தின் 14(இ) பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சலின் கீழ் அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் நாணய கடிதம் சார்ந்த கணக்கின் மூலம் இறக்குமதி செய்த பொருட்களுக்காக வழங்குனர்களுக்குச் செலுத்திய ரூபா 11,985,681 தொகை முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலின் கீழ் அறிக்கையிடப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. இந்த விடயம 2023 கணக்காண்டிலிருந்து காசுப்பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 19 இன் பிரகாரம் காப்பீட்டு முறைமையை (Actuarial method) பயன்படுத்தி தொழில்சார் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஈடுபட்டுள்ள 383 ஊழியர்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 40,174,665 பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அது பின்னைய ஆண்டுகளின் போது பின்பற்றப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போதும் இந்த நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்ற | காப்பீட்டு முறைமையின் கீழ் பணிக்கொடையை கணிப்பீடு செய்வதற்காக முன்னரைப் போலவே வெளிக் கணக்காய்வு நிறுவனத்தின் உதவியை பெற்றுக்கொள்வதற்காக பணிப்பாளர் சபைப் பத்திரம் | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் காப்பீட்டு முறைமை ((Actuarial method) இனை தொடர்ச்சியாகப் பயன்படுத்தி |

| | | |
|---|---|---|
| பிழையான குறிப்பு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதற்குப் பதிலாக கூட்டுத்தாபனத்தின் 240 ஊழியர்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் திசெம்பர் மாத சம்பளங்களின் மொத்த தொகையில் அரைவாசி அல்லது ரூபா 4,522,772 தொகை மீளாய்வாண்டிற்கான பணிக்கொடை ஒதுக்கீடாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. ஐயவினாவிற்கான பதிலாக 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டிருந்தும் அந்த அதிகாரச்சட்டத்தின் பிரகாரமும் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபா 85,751,940 ஆக இருக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூபா 35,461,706 ஆக இருந்ததனால் குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டது ரூபா 50,290,234 ஆகும். | சமர்ப்பிக்கப்பட்டுள்ளது டன் அதற்காக கிடைக்கின்ற அங்கீகாரத்தின் பிரகாரம் அடுத்துவரும் கணக்காய்வாண்டின் போது இது சம்பந்தமான செம்மையாக்கல்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்தம் பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்யபப்படுதல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு கொள்கைகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | சட்டரீதியான ஏற்பாட்டின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு இலவசமாக கிடைக்கின்ற மருந்து மூலப் பொருட்களுக்கு ஒரு விலைக் குழுவின் மூலம் விலை நிர்ணயிக்கப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு 2022 ஏப்ரல் 28 ஆந் திகதிய 14193 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானம் எடுக்கப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் கிடைத்திருந்த கஞ்சா, அபின் மற்றும் கொகரைனின் அளவு ரூபா 52,744,536 இற்கு பெறுமதியிட்டு அதனை பிற்போட்ட வருமானமாகவும் 2021 ஆம் ஆண்டில் உற்பத்திகாக்காக பயன்படுத்தப்பட்ட அளவு ரூபா 8,092,119 இற்கும் பெறுமதியிட்டு அதனை நானாவித வருமானமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலவசமாக கிடைத்த மூலப்பொருட்களை பெறுமதியிட்டு காட்டுவதன் மூலம் நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என தெரிவித்து மேற்கூறிய கணக்கு வைத்தலினை பின்னர் செம்மையாக்குவதற்கு 2023 யூன் | ஐய வினாவுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. 2023 கணக்காண்டில் சரிசெய்யப்படும். | இலவசமாகக் கிடைக்கின்ற மருந்துகள் சம்பந்தமாக பொருத்தமான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையை அறிமுகப்படுத்துவதற்கும் அதனை தொடர்ச்சியாக பின்பற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 16 ஆந் திகதிய 14420 ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டின் இறுதியில் பிற்போட்ட வருமானக் கணக்கின் மீதியான ரூபா 52,744,536 தொகையை மீண்டும் கணக்குகளிடையே செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க இலவசமாக கிடைக்கின்ற மருந்துகள் சம்பந்தமாக பொருத்தமான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கையினை அறிமுகப்படுத்துவதற்கும் அதனை தொடர்ச்சியாக பின்பற்றுவதற்கும் கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் மருந்துப் பூங்காக்களிலிருந்து கிடைக்கின்ற உலர்ந்த மருந்து மூலப் பொருட்களின் கிரயத்தை அறிமுகப்படுத்துவதற்காக முறையான ஒரு நடைமுறை அறிமுகப்படுத்தப்படவில்லை. அதற்கிணங்க மீளாய்வாண்டில் மருந்து பூங்காக்களிலிருந்து கிடைத்த உலர்ந்த 4,665 கிலோகிராம் மருந்து மூலப் பொருட்கள் ரூபா 1 வீதமும் 21,423 கிலோகிராம் மருந்து பொருட்கள் காணப்படுகின்ற சந்தை விலையின் கீழ் ரூபா 6,196,457 தொகைக்கும் பெறுமதியிட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மருந்து பூங்காக்களிலிருந்து உற்பத்திச்சாலைக்கு பெற்றுக்கொள்ளப்படுகின்ற மூலப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள சான்றுபடுத்திய விலைகளின் பிரகாரம் மற்றும் அவ்வாறு சான்றுபடுத்திய விலை நிர்ணயிக்கப்படாத மூலப் பொருட்களை காலத்திற்குப் பொருத்தமாக விலையிடுவதுடன் கணக்கீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | மருந்து பூங்காக்களிலிருந்து வழங்கப்படுகின்ற பச்சை மற்றும் உலர்ந்த மருந்து மூலப்பொருட்களுக்கு கிரயத்தினை அறிமுகப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக பின்பற்றக்கூடிய முறைப்படியான ஒரு நடைமுறையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மருந்து தூள்களுக்கு தனியார் மருத்துவர்கள் மற்றும் மருந்து உற்பத்திச் சாலைகளுக்கு விற்பனை செய்யப்படுகின்ற 01 கிலோகிராம் கஞ்சாவின் விற்பனை விலை முன்னைய ஆண்டில் ரூபா 20,000 ஆகவும் மீளாய்வாண்டில் ரூபா 15,000 ஆகவும் இருக்க வேண்டுமென விலைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க விற்கப்பட்ட கஞ்சா முன்னைய ஆண்டில் ரூபா 199.2 கிலோகிராம் மீளாய்வாண்டில் 224.69 கிலோகிராம் முறையே ரூபா 3,984,000 மற்றும் ரூபா 3,370,350 ஆக | பொலிஸ் மற்றும் இராணுவத்தினால் பறிமுதல் செய்த உலர்ந்த மற்றும் பச்சை கஞ்சா இருப்புக்கள் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கின்றன. உலர்ந்த கஞ்சா இருப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்காக ஒரு வைத்தியர், நிலையத்திற்குப் | விசேட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக போதியளவான மேலதிக தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இலவசமாகக் கிடைத்த மற்றும் சாதாரண சந்தையில் விற்கப்படாத தடைசெய்யப்பட்ட பொருட்களான ஒரு கிலோகிராம் கஞ்சாவின் விற்பனை விலை முன்னைய ஆண்டில் ரூபா 20,000 இற்கும் மீளாய்வாண்டில் ரூபா 15,000 இற்கும் தீர்மானிப்பதற்கு ஈடுபடுத்தப்பட்ட அடிப்படையினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு முன்னைய ஆண்டினைப் போல மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்பான உத்தியோகத்தர், இருப்புக்களைப் பொறுப்பேற்று கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பிவைக்கப்படுகின்றது. வெட்டப்பட்ட பச்சை பயிர்கள் கைப்பற்றப்படும் போது அந்த இருப்பினை சேரித்தல், போக்குவரத்து செய்தல், உலர்த்துதல், களஞ்சியப்படுத்துதல் முதலிய செயற்பாடுகளுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய செலவுகள் மாற்றமடைகின்றது. இது தொடர்பாக கவனம் செலுத்தி விலை தீர்மானிக்கப்படுகின்றது. | |

### 1.5.4 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு களஞ்சியங்கள் மற்றும் மருந்து விற்பனை நிலையங்களில் காணப்பட்ட சேதமடைந்த மற்றும் காலாவதியான இருப்புக்களுக்காக ரூபா 8,670,825 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் சேதமடைந்த மற்றும் காலாவதியான இருப்பின் உள்ளபடியான பெறுமதி ரூபா 12,885,943 ஆக இருந்ததனால் குறைவாக ஒதுக்கீடு செய்தல் ரூபா 4,215,118 ஆகும். மேலும் முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேதமடைந்த மற்றும் காலாவதியான பூர்த்தியான இருப்புக்கள் 133,873 அலகுகளின் மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்திக் கிரயம் ரூபா 3,287,068 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறான சேதமடைந்த இருப்புக்களுக்கான ஒதுக்கீட்டுக் கணககின் மீதி ரூபா 4,343,168 ஆக இருந்ததனால் ரூபா 1,056,100 மிகை ஒதுக்கீடு செய்தலானது முன்னைய ஆண்டின் இலாபத்திற்கு | ஐயவினாவுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. 2023 காலாண்டில் சரிசெய்யப்படும். | சேதமடைந்த மற்றும் காலாவதியான இருப்புக்களின் கிரயத்துடன் ஒப்பிட்டு அதற்காக ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதியை காலரீதியாக ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காணப்பட வேண்டிய போதிலும் அதற்காகவும் தேவையான செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | விற்பனைப் பிரிவின் விற்பனை அறிக்கைகளுடன் நிதிப்பிரிவின் அறிக்கைகளை ஒப்பீடு செய்த போது கைக்காசுக்கான விற்பனை ரூபா 732,947 மற்றும் கடனுக்கான விற்பனை ரூபா 14,004,863 குறைத்தும் நடமாடும் விற்பனை ரூபா 1,070,304 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானம் ரூபா 13,666,506 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு ஐயவினாவுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. கணக்குப் பிரிவினால் மூல ஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு விற்பனை அறிக்கைகள் பேணப்படுவதுடன் விற்பனைப் பிரிவினால் அவர்களின் பயன்பாட்டிற்காக மூல ஆவணங்கள் இன்றி விற்பனை அறிக்கைகள் பேணப்படுகின்றன. | விற்பனை வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்படுதல் வேண்டும். நாளதுவரையான விற்பனைத் தகவல்களைத் தயாரிப்பதற்காக விற்பனைப் பிரிவிற்கும் கணக்குப் பிரிவிற்குமிடையே தொடர்ச்சியான உள்ளக தொடர்புகளும் தொடர்ச்சியான இணக்கப்பாட்டு நடைமுறைகளையும் பேணுவதற்காக பொருத்தமான ஒரு பொறிமுறை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்த வேண்டிய ஊழியர் பிணை ரூபா 267,815 ஆக இருந்த போதிலும் ஊழியர் பிணைகளின் தனித்தனி மீதிகள் பட்டியலின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் 68 ஊழியர்களின் விடுவிக்கப்படாத பிணைப்பெறுமதி ரூபா 851,215 ஆக இருந்ததனால் ரூபா 583,400 ஆன ஊழியர் பிணை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. இந்த விடயம் எதில்காலத்தில் சரிசெய்யப்படும். | கணக்கீட்டு தகவல்களையும் தனித்தனி மீதிகளின் பட்டியலையும் காலரீதியாக கணக்கிணக்கம் செய்யும் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் நிலையான சொத்துக்களின் மீள்மதிப்பு ரூபா 825,362,289 ஆக காட்டப்பட்டிருந்தும் ஒவ்வொரு சொத்துக்கள் தொகுதிக்குமுரிய மீள்மதிப்பு ஒதுக்க தொகையை தனித்தனியாக இனங்காணக்கூடிய வகையில் கணக்கு குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஐய வினாவுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. கடந்த ஆண்டிற்கான அறிக்கையை பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிசார் தகவல்களின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு வெளிப்படுத்தல்கள் செய்யப்படுதல் வேண்டும்.. |
| (உ) | 2023 ஆகஸ்ட் 21 ஆந் திகதி மக்கள் வங்கியின் மீதியை உறுதிப்படுத்தும் | இறக்குமதி செய்யப்பட்ட | இப்பிழைகள் உடனடியாக |

| | | | |
|---|---|---|---|
| | கடித்தின் பிரகாரம் 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நிறுத்தப்பட்ட 03 நாணயக் கடித இலாபக் கணக்குகளின் மீதிகளின் மொத்தம் ரூபா 1,951,492 ஆக இருந்த போதிலும் அதனை நிதிக்கூற்றுக்களில் ரூபா 31,245,792 ஆக ரூபா 29,294,300 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | பொருட்கள் சம்பந்தமான அனைத்து திர்த்துவைத்தல்களும் கணக்குப் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்படாமையால் கணனி முறைமைக்குள் உள்ளடக்கப்படாமையின் காரணமாக அந்த வித்தியாசம் ஏற்பட்டுள்ளது எனவும் உரிய அறிக்கை கணக்குப் பிரிவினால் பெற்றுக்கொள்ளப்பட்ட உடன் நாட்குறிப்பின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | சரிசெய்யப்பட வேண்டியதுடன் கணக்குப் பிரிவின் கண்காணிப்பு நடைமுறையினை மீளாய்வு செய்து முறைமைப்படுத்துதல் வேண்டும். |
| (ஊ) | 2011/2012 இலிருந்து 2013/2014 வரையான மதிப்பீட்டு ஆண்டுகள் தொடர்பாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 12,673,956 ஆன வருமான வரி 2,015, 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அக்கொடுப்பனவுகள் வருமானவரி, ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக ‘‘பங்கிலாப வரி’’ என்ற பெயரிலான போலிச் சொத்துக்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இப்பிழையினை சரிசெய்வதற்காக உரிய போலிச் சொத்துக் கணக்கின் மீதி வருமான வரி ஒதுக்கீட்டுக் கணக்கிற்கு எதிராக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக 2017 இலிருந்து மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியாக ஒவ்வொரு ஆண்டிற்குமுரிய வருமான வரியை செம்மையாக்கும் பதிவுகளில் காட்டப்படும் வருமான வரியை ஒதுக்கீடு செய்யும் கணக்கின் மீதிகள் மேற்கூறிய போலிச் சொத்துக்கள் கணக்கின் மீதி கழித்து காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. வரி ஆலோசகரின் சேவையை பெற்று இதற்குத் தேவையான செம்மையாக்கல்களை எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானவரி கடப்பாடு இல்லை என்பதற்கான எழுத்துமூல உறுதிப்படுத்தலினை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | ஒரு கொடுக்கல் வாங்கலின் நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியினை விட மிகையாக பெற்றுக்கொள்ளல் அல்லது கொடுப்பனவு செய்தல் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் அவை சரிசெய்யப்படாமை | கடன்கொடுத்துதோர் கணக்கின் வரவு மீதி முற்பணங்களை மிகைத்து தீர்த்துவைத்ததனால் | கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் சம்பந்தமாக கட்டுப்பாட்டுக் |

| | | |
|---|---|---|
| மற்றும் சரியான பெறுவனவுகள் கொடுப்பனவுகள் பதியப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 150 கடன்பட்டோர் கணக்குகளின் மொத்தம் ரூபா 499,286 செலவு மீதியும் 273 கடன்கொடுத்தோர் கணக்குகளின் வரவு மீதியும் மிகுதியாக இருந்ததுடன் அக்கணக்குகளைத் திர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக கடன்பட்டோர்களிடமிருந்து மிகையாக பணத்தைப் பெறுதல் நடைமுறைப் பொறுப்பின் கீழும் கடன்கொடுத்தோர்களுக்கு மிகையாகச் செலுத்துதல் நடைமுறைச் சொத்துக்களின் கீழும் முன்னைய பல ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | ஏற்பட்டுள்ளதுடன் அது 2023 கணக்காண்டின் போது சரிசெய்யப்படும். கடன்பட்டோர் செலவு மீதி தொடர்பாக மேலும் ஆராய்ந்து பார்த்து மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி செய்யப்படும். | கணக்கு பேணப்படவேண்டிய துடன் பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். காலரீதியான கணக்கிணக்கம் செய்யும் மற்றும் தீர்த்துவைக்கும் கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.5 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா | தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (i) | பெறவேண்டிய ஊழியர் கடன் மீதி | 33,413,306 | 32,582,125 | 831,181 | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. இந்த விடயம் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | கணக்கீடு செய்யப்பட்ட தகவல்கள் தனித்தனி மீதிகளின் பட்டியல்களை காலரீதியாக கணக்கிணக்கம் செய்யும் கட்டுப்பாட்டு முறைமையை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்ட கடன் | 19,629,951 | 19,379,951 | 250,000 | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | கடன்பட்டோர் மீதி | 148,120,041 | 145,290,977 | 2,829,064 | இந்த நிலைமையை சரிசெய்வதற்காக கணனி மென்பொருள் முறைமையை நாளதுவரையாக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகளின் காலப்பகுப்பாய்விற்கு இணங்க மீதிகளுடன் ஒப்பீடு செய்து வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு தேவையான |

சரிசெய்தல் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.5.6 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | கிடைக்கப்பெற்ற விடயம் | தொகை<br>ரூபா | இல்லாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | காணி | 636,000,000 | பொறுப்பேற்றல் கட்டளையும் உரிமைச் சான்றிதழும் | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. இத்தகவல்கள் 15 ஆண்டுகளாக சமர்ப்பிக்க வேண்டியுள்ளதுடன் இது தொடர்பாக மேலும் பரீட்சித்து உரிய ஆவணங்களையும் கோவைகளையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிநிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் பொறுப்புக்கள் மூலதனம் மற்றும் ஒதுக்கம் சம்பந்தமான மூல ஆவணங்கள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளை உள்ளடக்கிய விபரமான தகவல்கள் முறைப்படியாக பேணப்படுதல் வேண்டும். |
| (ii) | பொதுச் செலவு முற்பணங்கள் | 5,006,437 | உரிய பட்டோலை | -மேற்படி- | --மேற்படி- |
| (iii) | நாணயக் கடிதங்களுக்குரிய 10 சதவீத பிடித்து வைத்தல் பணம் | 1,894,902 | உரிய பட்டோலை | -மேற்படி- | --மேற்படி- |
| (iv) | கேள்வி பாதுகாப்பு வைப்பு | 15,076,310 | வைப்பு பதிவேடு, பட்டோலைகள் மற்றும் காலப் பகுப்பாய்வு | -மேற்படி- | --மேற்படி- |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 148,120,041 தொகையான 103 கடன்பட்டோர் | மீதிகளின் உறுதிப்படுத்தல் | கடன்பட்டோர் மீதிகளின் சரியான |

| | | |
|---|---|---|
| மீதிகளில் ரூபா 122,112,233 தொகையான 83 மீதிகள் தொடர்பான கடன்கொடுத்தோர்களுக்கு மாத்திரம் மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது. அவற்றில் ரூபா 76,049,448 தொகையான 64 மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. பதில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ரூபா 46,970,144 தொகையான 19 கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 4,774,576 தொகையான 12 கடன்பட்டோர்களினால் பணம் செலுத்த வேண்டி இல்லை எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இன்னும் 05 கடன்பட்டோர்கள் தொடர்பான புத்தகப் பெறுமதி ரூபா 41,316,793 ஆக இருந்த போதிலும் அக்கடன்பட்டோர்களால் உறுதிப்படுத்தப்பட்ட மீதி ரூபா 25,519,958 ஆகும். அதற்கிணங்க ரூபா 119,101,188 தொகையான 91 கடன்பட்டோர் மீதிகள் உறுதிப்படுத்தல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கடிதங்களுக்கான பதில்கள் கிடைக்காமையானது கட்டுப்படுத்த முடியாத நிலைமையானதுடன் உறுதிப்படுத்தப்பட்ட பெறுமதிக்கும் புத்தகப் பெறுமதிக்குமிடையே வித்தியாசம் இருக்குமாயின் அவற்றினை இனங்கண்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | தன்மை மற்றும் கடனை அறவீடு செய்யும் இயலுமை தொடர்பாக முறையான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதன் பெறுபேறுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.2 செலுத்தவேண்டியவைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 149,673,300 தொகையான 116 கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 117,875,459 தொகையான 61 மீதிகள் தொடர்பாக மாத்திரம் மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அவற்றில் ரூபா 31,932,249 தொகையான 10 கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 469,998 தொகையான 03 கடன்கொடுத்தோர்களிடமிருந்து பணம் அறவிட வேண்டி இல்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. இன்னும் 02 கடன்கொடுத்தோர்கள் தொடர்பான புத்தகப் பெறுமதி ரூபா 262,098 ஆக இருந்த போதிலும் உறுதிப்படுத்தப்பட்ட மீதி ரூபா 103,188 ஆகும். ஒரு கடன்கொடுத்தோர் தொடர்பான புத்தகப் பெறுமதி ரூபா 426,750 ஆக இருந்த போதிலும் அப்பெறுமதி ரூபா 436,500 என உறுதிப்படுத்தப்பட்டிருந்த துடன் 04 கடன்கொடுத்தோர்கள் மீதியுடன் இணங்கியிருக்கவில்லை. அதற்கிணங்க ரூபா 118,058,608 தொகையான 106 கடன்கொடுத்தோர்களுக்குரிய கடன் மீதிகள் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்குப் பிரிவினால் கடன்கொடுத்தோர்கள் தொடர்பான விபரமான தகவல்கள் பேணப்படாததுடன் அவை கணனி பெக்கேஜின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. எனவும் மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதத்திற்காக பதில் கிடைக்காமையானது கணக்குப் பிரிவின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நடைமுறையாகும். | கடன்கொடுத்தோர் மீதிகளின் சவரியான தன்மை மற்றும் கடனை செலுத்தும் இயலுமை தொடர்பாக முறையான பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் அதன் பெறுபேறுகள் கணக்காய்விற்கும் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.3 முற்பணங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குறித்த செலவுக்கான உபகட்டுநிதியைப் பெற்றுக்கொண்ட பதவிநிலை உத்தியோகத்தர்களினால் அச்செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் அல்லது செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டு 10 நாட்களுக்குள் நிதிப்பிரமாணம் 371(2) மற்றும் (5) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் கட்டுநிதி திர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 09 உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொண்ட ரூபா 579,900 மொத்த தொகையான குறித்த செயலுக்கான 21 உப கட்டுநிதிகளை திர்த்துவைப்பதற்காக செயற்பாட்டினைப் பூர்த்திசெய்து 10 நாட்களை மிகைத்து 05 நாட்களுக்கும் 134 நாட்களுக்கும் இடைப்பட்ட காலவீச்சில் தாமதமடைந்திருந்தது. மேலும் கட்டுநிதி வழங்கப்பட்ட பணம் ஆண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கட்டுநிதி மீள ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் 10 உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொண்ட மொத்தமாக ரூபா 169,408 தொகையான குறித்த செயலுக்கான உபகட்டுநிதி மற்றும் 12 சிறு செலவுக் காசுக்குப் பொறுப்பானவர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 76,530 தொகையான சிறு செலவுக் காசு முற்பணங்கள் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்துவைக்கப்படாத முற்பணங்களை தீர்த்துவைக்குமாறு அந்த முற்பணங்களைப் பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் சம்பந்தமாக அனைத்து நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிராமணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலிவற்றுக்கான தொடர்புகள் | இணக்கமின்மைகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசியு கணக்காய்வு அதிகாரச் சட்டம் | | | |
| (i) 18(4) ஆம் பிரிவு | அதிகாரச் சட்டத்தின் 18(2) ஆம் பிரிவின் பிரகாரம் தீர்மானிக்கப்பட்ட கணக்காய்வு கட்டணம் தொடர்பாக நிறுவனத்தினால் இன்வொயிசில் | 2018 ஆம் ஆண்டு வரை கணக்காய்வுக் கட்டணம் தவணை ரீதியாக செலுத்தப்பட்டுள்ளது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பிட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் 2019 இலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை மொத்தமாக ரூபா 4,836,000 ஆன கணக்காய்வுக் கட்டணம் 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதிவரையும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரையான கணக்காய்வுக் கட்டணத்தையும் தவணைரீதியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையினை கவனத்திற்கு எடுத்து எதிர்காலத்தில் துரிதமாக இப்பணத்தை செலுத்தி முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | எடுத்தல் வேண்டும். |
| (ii) | 38(1)(உ) ஆம் பிரிவு | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்படும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம்பெறுகின்றது என கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்துதல் வேண்டும். எவ்வாறாயினும் 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆகிய கணக்காண்டுகள் தொடர்பான 24 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதில் வழங்குவதற்கு 2023 ஒக்தோபர் 30 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்கள் சரியானவை. மிகுதி கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2023 நவம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 39(1) மற்றும் 39(2) ஆம் பிரிவுகள் | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்ற விபரமான கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்கள் சம்பந்தமாக அந்த அறிக்கைத் திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் உத்தேசிக்கப்படுகின்ற பரிகார நடவடிக்கைகள் அல்லது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் விபரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக உத்தியோகத்தர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அது | அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | அமுல்ப்படுத்துவதற்கு அல்லது அமுல்ப்படுத்தமுடியாமைக்கான காரணம் தலைமை அதிபதிக்கு மற்றும் உரிய அமைச்சிற்கு தெரியப்படுத:துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் விபரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை சம்பந்தமான தேவையான நடவடிக்கை 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தமாக பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திறைசேரி செயலாளர் மற்றும் அமைச்சருக்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| | (i) | நிதிப்பிரமாணம் 103, 104 மற்றும் 105 | முழுக் கிரயம் ரூபா 12,885,943ஆன காலம் கடந்த மற்றும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத இருப்புக்கள் மற்றும் மொத்த கிரயம் ரூபா 9,459,348 ஆன இருப்பு பற்றாக்குறை சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் விற்பனை நிலையங்கள் மற்றும் 08 களஞ்சியங்களின் 2019 ஆம் ஆண்டிற்கான மொத்தமாக ரூபா 2,178,305 ஆன பற்றாக்குறை மற்றும் ரூபா 1,484,545 தொகையான மிகைகள் சம்பந்தமாக 2021 நவம்பர் 01 ஆந் திகதிய 14,026 ஆம் இலக்க பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பற்றாக்குறை மற்றும் மிகை குழு நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவினால் பற்றாக்குறை மிகை மற்றும் சேதங்கள் சம்பந்தமாக சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்று உரிய சிபாரிசு அமுல்ப்படுத்தப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | (ii) | நிதிப்பிரமாணம் 395(இ) | ஒவ்வொரு மாதத்தில் ஏற்பட்ட கொடுக்கல் வாங்கல் நிலைமை சம்பந்தமாக அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் தகிதிக்கு | மூல ஆவணங்கள் தாமதமாக கிடைத்ததன் அடிப்படையில் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முன்னர் வங்கி கணக்கிணக்க கூற்றினை தயாரிக்க வேண்டிய போதிலும் 04 வங்கி கணக்குகள் சம்பந்தமாக மேற்கூறிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கொடுக்கல் வாங்கல்களை கணக்கீடு செய்வதற்கு தாமதமடைந்துள்ளது டன் வங்கி கணக்கிணக்க கூற்றுக்களும் தாமதமடைந்துள்ளன. தற்பொழுது பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்ற புதிய கணனி பெக்கேஜ் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் இச்சிக்கல் தவிர்த்துக் கொள்ளப்படலாம். | வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 756 (6) | மீளாய்வாண்டிற்கான இருப்பு மீளாய்வு அறிக்கையின் பிரகாரம் 13 விற்பனைக் கடைகளின் ரூபா 1,223,002 தொகையான பூர்த்தியான இருப்பின் 9,966 அலகுகளின் பற்றாக்குறை மற்றும் ரூபா 251,821 தொகையான பூர்த்தியான இருப்புக்களின் 813 அலகுகளின் மிகைகளும் 06 மூலப்பொருள் களஞ்சியங்களின் மற்றும் 10, 24 மற்றும் 8,13 ஆம் இலக்க களஞ்சியங்களின் ரூபா 8,236,346 தொகையான 60,433 அலகுகளின் பற்றாக்குறை மற்றும் 4,784,698 தொகையான 89,253 அலகு இருப்புக்களின் மிகைகளும் காணப்பட்ட போதிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பற்றாக்குறை மற்றும் மிகை குழுக்கள் ஸ்தாபிக்கப்பட்டு 02 குழுக்கூட்டங்கள் தற்பொழுது முடிவடைந்துள்ளதுடன் இறுதியான சிபாரிசு அறிக்கையினை துரிதமாகப் பெற்றுக்கொண்டு இது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 880 மற்றும் 881 | பிணைவைக்க வேண்டிய 02 உத்தியோகத்தர்களினால் மொத்தமாக ரூபா 40,000 பிணைப் பணத்தை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அரசாங்க கணக்குகளுக்குரிய வவுச்சர்களை சான்றுபடுத்துகின்ற காசோலைகளில் கையொப்பமிடுகின்ற | கூட்டுத்தாபனத்தின் பிணைவைப்புச் செய்ய வேண்டிய காசாளர்கள் மற்றும் நிலையத்திற்குப் பொறுப்பான அனைத்து உத்தியோகத்தர்களாலும் தற்பொழுது பிணைவைப்புச் செய்யப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களினாலும் பிணை வைக்கவேண்டிய போதிலும் மேற்கூறிய ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க கணக்குகளுக்குரிய வவுச்சர்களை சான்றுபடுத்துகின்ற காசோலைகளில் கையொப்பமிடுகின்ற உத்தியோகத்தர்களின் பிணை சம்பந்தமாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது உற்பத்தி ஊக்குவிப்பு படி ரூபா 20,917,337, வருமானப்படி ரூபா 9,897,950, வினைத்திறன் படி ரூபா 34,114,768 என்பனவாக மொத்தமாக ரூபா 64,930,055 தொகையினையும் உள்ளடக்கி கடந்த 08 ஆண்டுகளின் போது ரூபா 611,071,569 தொகை பொதுத்திறைசேரியின் அங்கீகாரமின்றி ஊக்குவிப்பு படியாகச் செலுத்தப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஊக்குவிப்பு படி முறைமை அமுல்ப்படுத்தப்படுகின்றது. அதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் சிபாரிசுடன் அரசாங்க தொழில்முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் இன்றுவரை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை மற்றும் உற்பத்தி இலக்குகளை அடைந்து கொள்ளும் போது நீண்டகாலமாக அமுல்ப்படுத்தப்பட்ட ஊழியர் அபிலாசை முறைமையை நிறுத்துவதற்கு முடியாதுள்ளது. | முறைப்படியான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்ட ஊக்குவிப்புப்படி முறைமையின் அடிப்படையில் மாத்திரம் ஊக்குவிப்பு படி செலுத்தப்படுதல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 3(x) ஆம் பந்தி | அரசாங்கத்தின் உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் கீழ் திறைசேரி உத்தியோகத்தர்களுக்கு வழங்குகின்ற கடன்வசதிகள் 2022 ஆம் ஆண்டின் இறுதியளவில் நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 04 பதவிநிலை | ஒரு உத்தியோகத்தர் சேவையிலிருந்து நீங்கியதனால் முழுப்பணமும் அறவிடப்பட்டதுடன் மற்றைய உத்தியோகத்தர்களிடமிருந்து தவணைப் பணம் அறவிடப்பட்டு வருவதுடன் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்கு மொத்தமாக ரூபா 1,000,000 பணம் மேற்கூறிய ஏற்பாடுகளுக்கு முரணாக வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சுற்றறிக்கைக்கு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 2022 ஆகஸ்ட் 08 ஆந் திகதிய 04/2022 ஆம் இலக்க அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.12 ஆம் பந்தி | செலவுகள் தொடர்பாக வினைத்திறனான ஒரு கட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துவதற்காக ஒரு உயர்மட்ட முகாமைத்துவக் குழு தோற்றுவிக்கப்பட்டு ஒவ்வொரு மாத இறுதியிலும் பணிப்பாளர் சபைக்கு வீண்விரயத்தினையும் வினைத்திறனின்மையையும் குறைத்தல் மற்றும் பொதுச் செயற்பாட்டுக் கிரயத்தினை குறைப்பதன் மூலம் செயற்பாட்டு வினைத்திறனை மேம்படுத்துவதற்கான நுழைவுகள், உரிய வகையில் தொழில்முயற்சி பிரதி பலன்களையும் வெளிநாட்டு நாணயமாற்று உழைப்பினையும் மேம்படுத்துவதற்கான புதிய நுழைவுகள், மனிதவளங்களை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கான பிரேரணைகளும் செயற்பாட்டு மற்றும் பொதுநடவடிக்கை கிரயத்தினை குறைப்பதற்கான இலகுவான தகவல் தொழில்நுட்ப தீர்வுகள் முதலியவாறான வகையில் தனது சிபாரிசினை அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். எனினும் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | செலவுகளை வினைத்திறனாக கட்டுப்படுத்துவதற்காக பிரிவுத்தலைவர்களின் கூட்டத்தின் போது அது தொடர்பாக கவனம் செலுத்தி ஆலோசனை வழங்கப்பட்டது. செலவுகள் சம்பந்தமான தகவல்கள் ஒவ்வொரு பணிப்பாளர் சபைக் கூட்டத்திலும் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. புதிய உற்பத்தி மற்றும் புதிய பொதியிடலினை அறிமுகப்படுத்துவதற்கு சந்தைப்படுத்தலினை மேம்படுத்துவதற்கு மற்றும் சந்தைப்படுத்தலுக்கான தகவல் தொழில்நுட்ப முறைமையினை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1.01 மில்லியன் மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 17.73 மில்லியனாகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 18.74 மில்லியன் முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. விலைகள் அதிகரித்ததன் காரணமாக முன்னைய ஆண்டினை விட விற்பனை வருமானம் ரூபா 135.67 மில்லியனால் அதிகரித்தல் மற்றும் வட்டி விகிதம் அதிகரித்ததன் காரணமாக நிலையான வைப்புக்களின் அடிப்படையில் நிதி வருமானம் ரூபா 13.92 மில்லியனால் அதிகரித்தல் இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 2.2. பிரதான வருமானங்கள் மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் விற்பனை வருமானம் ரூபா 16.95 சதவீத்தினால் அதிகரித்திருந்த போதிலும விற்பனைக் கிரயமும் 14.89 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. ஏனைய வருமானங்கள் ரூபா 8.75 மில்லியனால் அதிகரித்திருந்தும் தாபன மற்றும் நிருவாக செலவுகள் ரூபா 32.01 மில்லியனாலும் விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தல் செலவுகள் ரூபா 19.90 மில்லியனாலும் அதிகரித்திருந்ததனால் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 15.34 மில்லியன் நட்டம் அடையப்பட்டிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மொத்த இலாப விகிதம் ரூபா 1.29 சதவீதத்தினாலும் தேறிய இலாப விகிதம் ரூபா 2.22 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உற்பத்திசெய்த மருந்துவகைகளின் அடிப்படையில் நிறையிடப்பட்டு உரிய உற்பத்தி அலகின் அளவில் ஊக்குவிப்பு படி உற்பத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி பங்களிப்பினை வழங்குகின்ற ஊழியர்களுக்காக அமுல்படுத்தப்படுவதன் மூலம் நிறுவனத்தின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்வதற்கு முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறான முறைமைக்குப் பதிலாக ரூபா 15 மில்லியனுக்கு மிகையாக அதிகரிக்கும் மாதாந்த உற்பத்திக் கிரயத்தினை அடிப்படையாகக் கொண்டு கூட்டுத்தாபனத்தின் அனைத்து பிரிவுகளிலுமுள்ள ஊழியர்களுக்கும் மாதாந்தம் ரூபா 02 மில்லியனுக்கும் ரூபா 07 மில்லியனுக்கும் இடைப்பட்ட பணம் உற்பத்தி ஊக்குவிப்பு படியாகச் செலுத்தப்பட்டது. முன்னைய ஆண்டின் ரூபா 52,781,881 தொகையான இந்த ஊக்குவிப்பு படி செலவானது மீளாய்வாண்டின் போது ரூபா 64,930,055 வரை 23 சதவீதத்தினால் அதிகரித்துிருந்ததுடன் உற்பத்தி கிரயம் அதிகரித்தல் போன்ற சந்தர்ப்பங்களின் போது கூட்டுத்தாபனத்தின் இலாபத்தன்மை குறைவடைந்திருந்தும் செலுத்தப்பட்ட உற்பத்தி ஊக்குவிப்பு படியினை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | உற்பத்தி அலகுகளின் அளவு அடிப்படையில் கணிக்கப்பட்ட ஊக்குவிப்பு படி முறைமையானது தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுகி ன்றது. உற்பத்திக் கிரயம் அதிகரிக்கின்ற சந்தர்ப்பங்களில் அதற்கு சமமாக ஏற்படுகின்ற தாக்கத்தினைக் குறைப்பதற்காக நிகழ்காலத்தில் 2021 ஆம் ஆண்டில் காணப்பட்ட உற்பத்திக் கிரயத்தினை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்படுகின்றது. | வெவ்வேறு செயலாற்றல் களுடனான பிரிவுகள் அதற்கிணங்க மதிப்பீடு செய்வதற்குப் பதிலாக உற்பத்தி நடவடிக்கைகளுக் காக நேரடி பங்களிப்பினை வழங்குகின்ற ஊழியர்களுக்கு ஈடுபடுத்தப்படுகின் ற உற்பத்திக் கிரய அடிப்படையில் அனைத்து பிரிவுகளையும் மதிப்பீடு செய்வது பொருத்தமற்றதுட ன் உரிய உற்பத்தி அலகுகளின் அளவின் அதிகரிப்பின் அடிப்படையில் கணிக்கப்படுகின்ற ஊக்குவிப்பு படியானது உற்பத்திப் |

| | | | |
|---|---|---|---|
| | | | பிரிவிற்கு மாத்திரம் மற்றும் ஏனைய செயலாற்றல்களின் அடிபப்படையில் கணிக்கப்படுகின்ற ஊக்குவிப்பு படியினை மற்றைய பிரிவுகளுக்கும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்து நிறுவனத்தின் வினைதிறனை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | களஞ்சியத்தில் முறைப்படியாக இருப்புக்கள் களஞ்சியப்படுத்தப்படாதிருந்ததுடன் உச்ச அளவு, ஆகக்குறைந்த அளவு, மீள் கட்டளை மற்றும் சிக்கன இருப்பு மட்டங்கள் பேணப்படவில்லை எனவும் மெதுவாக அசைகின்ற இருப்புக்கள் காணப்படுகின்ற போதிலும் அந்த இருப்புக்களை இனங்கண்டு விற்பனையை மேம்படுத்துதல் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் மருந்துகளின் விலைகள் அதிகரித்தல், லேபல் மற்றும் பொதிசெய்தல் கழண்டிருத்தல் முதலியவற்றின் காரணமாக விற்பனையிலிருந்து நீக்கப்பட்ட மருந்து வகைகள் காலாவதியான மருந்துகளுடன் சேர்த்து களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது எனவும் அந்த இருப்புக்களை மீண்டும் லேபல் செய்து விற்பனை செய்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்காது காலாவதியாவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது எனவும் விற்பனை நிலையங்களிலும் களஞ்சியங்களிலும் காணப்பட்ட காலாவதியாகி பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத மருந்து வகைகள் நீண்டகாலமாக இருப்பேடுகளிலிருந்து நீக்கப்படாது சாதாரண இருப்பாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது எனவும் விற்பனை நிலையங்களில் காணப்பட்ட காலாவதியாகி பயன்பாட்டிற்கு | பின்காட் பேணுதலானது நிகழ்காலத்தில் மிகவும் சிக்கலானதாகும். விற்பனை நிலையங்களில் இருப்பு பேரேட்டினை நாளதுவரையாகப் பேணுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது 03 ஆண்டுகள் சேதமடைந்த இருப்புக்கள் காணப்படுவதனால் மிகவும் விரைவாக அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்து எதிர்காலத்தில் நாளதுவரையாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். களஞ்சியத்தில் இடவசதி போதியளவு இல்லாமையினால் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் சேதமடைந்த இருப்புக்களை ஒரே இடத்தில் சேகரித்து | களஞ்சிய மற்றும் இருப்பு நிருவாகத்தினை முறைமைப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| எடுத்துக்கொள்ள முடியாத மருந்து வகைகள் மத்திய களஞ்சியத்திற்கு அனுப்பிவைக்கப்படாமையால் ஒழுங்கீனங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக் காணப்பட்டது எனவும் விற்பனை நிலையங்களில் பாரிய அளவிலான இடம்குறைந்த பயன்பாட்டிற்கு உட்பட்டு காணப்பட்டது எனவும் அவதானிக்கப்பட்டது. | வைக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. லேபல மற்றும் பொதிகள் கழண்டிருத்தல் முதலிய காரணத்தினால் விற்பனை செய்வதிலிருந்து நீக்கப்பட்ட மருந்துகளை மீண்டும் உற்பத்திச்சாலைக்கு அனுப்பி மீண்டும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைக்கு மாற்றப்படுகின்றன. 2023 ஒக்தோபர் மாதத்திலிருந்து உச்ச அளவு, ஆகக்குறைந்த அளவு, மீள்கட்டளை மற்றும் சிக்கன இருப்பு மட்டங்களைத் தயாரித்து உற்பத்தி திட்டங்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த விற்பனை வருமான மதிப்பீடு ரூபா 970,000,000 ஆக இருந்ததுடன் உள்ளபடியான வருமானம் ரூபா 935,892,860 ஆகும். அதில் ரூபா 681,103,129 அல்லது 73 சதவீதமானது அரசாங்க துறையிலிருந்து கிடைத்திருந்ததுடன் தனியார் துறையிலிருந்து கிடைத்த வருமானம் ரூபா 254,789,731 அல்லது 27 சதவீதமாகும். அதற்கிணங்க மீளாய்வாண்டில் ரூபா 305,000,000 தொகை தனியார் துறையின் மதிப்பீட்டில் ரூபா 49,809,990 அல்லது 16 சதவீத வருமான இலக்கினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. சுலபமாகக் கிடைக்கின்ற அரசாங்க துறையின் வேண்டுதல் தொடர்பானவை மிகவும் வீழ்ச்சியடைந்திருத்தலும் சந்தை தேவைப்பாடு முறையாக இனங்காணப்படாமையும் புதிய பிரசித்தப்படுத்தல் மற்றும் சந்தை மேம்பாட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்படாமையும் போதியளவில் இல்லாமையும் தனியார் | விற்பனை விலைகளைத் தயாரிப்பதற்காக உற்பத்திக் கிரயத்தினை அடிப்படையாகக் கொள்வதற்குரிய அறிக்கையானது கிரயப் பிரிவினால் அந்த அந்த சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ளது. தனியார் துறையின் விற்பனையை அதிகரிப்பதற்காக பிரசித்தப்படுத்தல் மற்றும் விற்பனை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு | தனியார் துறையின் விற்பனை வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | துறையின் விற்பனை வருமானம் குறைவடைந்தமைக்கு காரணமாக இருந்தது. | வருவதுடன் 2023 ஆம் ஆண்டிலிருந்து விற்பனை முகவர்களை மீண்டும் ஸ்தாபித்தல் மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளுக்கு பொருத்தமானவர்களை தெரிவுசெய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் தமது சந்தைப் பங்கினைத் தீர்மானிப்பதற்காக காலரீதியாக சந்தை மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் போட்டி நிறுவனங்களுக்கிடையே கூட்டுத்தாபனத்தின் சந்தைப்பங்கு குறைவடைதல் அல்லது அதிகரித்தல் இடம்பெற்றுள்ளதா என்பது தொடர்பான புரிந்துணர்வு காணப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவினால் அந்த அந்த விற்பனை நிலையங்கள் மற்றும் பொதுவான சந்தை மீளாய்வு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் போட்டி நிறுவனங்களின் உற்பத்தி விலைகள் மற்றும் சந்தைப்படுத்தல் நுட்பங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்டு சந்தைப்படுத்தல் பிரிவின் கூட்டங்களின் போது கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் கூட்டுத்தாபனத்தின் சந்தை பங்கு பாவனையாளர் கருத்துரைகள் மற்றும் காணப்படுகின்ற வாய்ப்புக்கள் முதலியவை தொடர்பாக மீளாய்வினை மேற்கொள்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட திறன்தொழில் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கினைத் தீர்மானிப்பதற்காக அதனை அதிகரிக்கச் செய்வதற்காக அதேபோல புதிய பாவனையாளர் தேவைப்பாட்டினை திருப்திகொள்ளும் வகையில் சந்தைப் போக்கினை இனங்காண்பதற்காக சந்தை மீளாய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட வருடாந்த உற்பத்தி திட்டத்திற்கு இணங்க அரிஸ்த, ஆஸவ, எண்ணை இக்வாத, சிரப் என்பவைகளை உள்ளடக்கிய திரவ மருந்து வகைகளின் திட்டமிட்ட வருடாந்த மருந்து | 2022 ஆம் ஆண்டின் வருடாந்த திட்டமிட்ட உற்பத்தியானது தொழிற்சாலை கிரய விலையின் பிரகாரம் | முன்னைய ஆண்டுகளின் இயலளவு மற்றும் காணப்படுகின்ற |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தி 627,712 லீற்றர்கள் மற்றும் சூர்ண, குகுல், கல்க, லேப, லேஹ,மோதக, ரஸ, வடீ என்பவைகளை உள்ளடக்கிய மருந்துப் பொருட்களின் திட்டமிட்ட வருடாந்த மருந்து உற்பத்தி 151,179 கிலோ கிராம்களை உற்பத்திசெய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தும் உள்ளபடியான உற்பத்தி முறையே திரவவகைகளில் 389,750 லீற்றர்களும் மருந்துப் பொருட்களில் 70,799 கிலோ கிராம்களுமாகும். அதற்கிணங்க வருடாந்த எதிர்பார்த்த உற்பத்தி முறையே திரவ வகைகளில் 237,962 லீற்றர்களையும் அதாவது 38 சதவீதத்தினையும் மற்றும் மருந்துப் பொருட்களில் 80,380 கிலோ கிராம்களையும் அதாவது 53 சதவீதத்தினையும் அடைந்துகொள்வதற்கு முடியாதிருந்தது. மேலும் மீளாய்வாண்டில் 12 உற்பத்திப் பொருட்களுக்கான 2135 உற்பத்தி வேலை அட்டைகளுக்கு திட்டமிடப்பட்டிருந்தும் பூர்த்திசெய்த உள்ளபடியான வேலை அட்டைகளின் அளவு 1441 ஆக இருந்ததனால் 694 வேலை அட்டைகளின் அளவு அதாவது 33 சதவீதம், பிரதான உற்பத்திச்சாலையின் 04 புதிய உற்பத்திப் பொருட்களுக்காக 215 உற்பத்தி வேலை அட்டைகள் திட்டமிடப்பட்டிருந்தும் பூர்த்திசெய்த உள்ளபடியான வேலை அட்டைகளின் அளவு 127 ஆக இருந்ததனால் 88 வேலை அட்டைகளின் அளவு அதாவது 41 சதவீதம் மற்றும் புதிய உற்பத்திச்சாலையின் 12 புதிய உற்பத்திப் பொருட்களுக்காக 1228 வேலை அட்டைகள் திட்டமிடப்பட்டிருந்தும் பூர்த்திசெய்த உள்ளபடியான வேலைத்தாள்களின் அளவு 423 ஆக இருந்ததனால் 805 வேலை அட்டைகளின் அளவு அதாவது 66 சதவீதத்தினை பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தமையானது எதிர்பார்த்த உற்பத்தி இலக்கினை அடைந்து கொள்ளாமைக்கு பிரதான காரணமாக இருந்தது. | ரூபா 683,458,641 ஆக இருந்த போதிலும் உள்ளபடியான வருடாந்த உற்பத்தி கிரயம் ரூபா 495,531,635 ஆகும். அதற்கிணங்க வருடாந்த திட்டமிட்ட உற்த்தியில் ரூபா 187,927,006 குறைவினை சுட்டிக்காட்டியிருந்த போதிலும் வருடாந்த திட்டமிட்ட உற்பத்தியில் 72.5 சதவீத அளவான இலக்கினை அடைந்து கொள்வதற்கு முடியாதிருந்தது. 2022 ஆம் ஆண்டில் காணப்பட்ட கலவரமான நிலைமையினை முன்னிட்டு உற்பத்திக் கிரயம் அதிகரித்தல், மூலப்பொருட்கள் தட்டுப்பாடு, போக்குவரத்து சிக்கல் ஊழியர் வருகை மட்டுப்படுத்தப்படல் போன்ற பல விடயங்கள் பிரதானமாக இதற்கு தாக்கமளித்திருந்தது. | வளங்களின் அளவு என்பவற்றை கவனத்தில் கொண்டு அடுத்துவரும் ஆண்டின் உற்பத்தி திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் உரிய உற்பத்தி இலக்கினை வெற்றி பெறச் செய்வதற்காக போதியளவு செயலாற்றல் முன்னேற்றத்தினை பேணுதல் வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தினினால் தயாரிக்கப்பட்ட உற்பத்தி திட்டம் மற்றும் சந்தைப்படுத்தல் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்ற கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளின் செயற்பாடுகளின் நடவடிக்கைகளை மதிப்பீடு செய்வதற்காக செயலாற்றல் குறிகாட்டிகள் தோற்றுவிக்கப்பட்டு அச்செயற்பாடுகளின் செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஒவ்வொரு பிரிவுக்கான செயலாற்றல் குறிகாட்டி தோற்றுவிக்கப்பட்டு அச்செயலாற்றலினை மதிப்பீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவினதும் நடைமுறைகளின் செயலாற்றலினை மதிப்பீடு செய்வதற்கான செயலாற்றல் குறிகாட்டியினை தோற்றுவித்து அந்த நடவடிக்கையின் |

| | | | |
|---|---|---|---|
| | | | செயலாற்றல் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |
| (உ) | 1969 மே 11 ஆந் தகிதிய 14853/3 ஆம் இலக்க இலங்கை அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தலின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் 07 குறிக்கோள்களுக்கு மத்தியில் ஆயுர்வேத மருந்துவகைகளை உற்பத்தி செய்வதற்குரிய தேவையான சுத்தமான பசுநெய்யை தயாரிப்பதற்கு சுத்தமான பசுப்பாலினைப் பெற்றுகொள்வதற்காக பால் பண்ணைகளைப் பேணுதல், மருந்து வகைகளைத் தயாரிப்பதற்காக தேவையான தேனை தயாரிப்பதற்கு தேனீக்களை உருவாக்குதல் மற்றும் தேனீக்களை உருவாக்குவதனை வீட:டுக் கைத்தொழிலாக அபிவிருத்தி செய்தல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்குறிக்கோள்கள் தொடர்பாக நிகழ்கால பணிப்பாளர் சபையினால் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் மூலம் அல்லது ஒருங்கிணைந்த செயற்திட்டமாக பசுமாட்டு பண்ணையை பேணுவதற்கு கருத்தில் கொள்ளப்படுகின்றது. நிகவெரடிய மருந்து பூங்காவில் 20 தேனீ கூடுகளை ஸ்தாபிப்பதற்கும், கேகாலை மாவட்டத்தில் வறகாபொல பிரதேச செயலாளர் பிரிவில் நவோதய சினேகபூர்வ சங்கத்துடன் ஒன்றிணைந்து 30 தேனீ கூடுகளை ஸ்தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு அல்லது நடைமுறைச் சாத்தியமான நிலைமைக்கு இணங்கும் வகையில் குறிக்கோள்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | 2022 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் வருடாந்த சுற்றுப் பயணத்திற்காக ரூபா 1,800,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது என்ற பிழையான விடயத்தினை காட்டியதனை அடிப்படையாகக் கொண்டு 2022 பெப்ரவரி 10 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர்கள் சபையின் 14143 ஆம் இலக்க தீர்மானத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டிற்கான சுற்றுலா பயணத்திற்கு ரூபா 4,500,000 செலவு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 20,152,134 நட்டமும் ரூபா 17,728,950 தேறிய நட்டமும் அடைந்துகொள்ளப்பட்டிருந்தும் அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக | ஒவ்வொரு வருடமும் பாதீட்டில் மனித வளங்கள் பிரிவிற்கு வருடாந்த சுற்றுப் பயணத்திற்காக நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. நாட்டில் காணப்பட்ட Covid 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் சுற்றுப்பயணத்தினை ஒழுங்குபடுத்துவதற்கு முடியாதிருந்தது. அதற்கிணங்க 2022 | ஏதாவது நிதி ஆண்டின் செலவுக்காக பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடானது அடுத்துவரும் ஆண்டிற்காக பயன்படுத்த முடியாது. செயற்பாட்டு நட்டம் அடைந்துகொள்ளப்பட்ட நிலைமையை கவனத்தில் |

| | | |
|---|---|---|
| சிறந்த கண்காணிப்பும் ஒழுக்கமும் பேணப்பட வேண்டிய போதிலும் அப்பயணத்திற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டு எல்லையையும் 147 சதவீதத்தினால் மிகைத்து ரூபா 4,442,861 தொகை கூட்டுத்தாபனத்தின் நிதியிலிருந்து செலவு செய்யும் போது அதன் பாதகம் தொடர்பாக முறையான கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இதற்காக செலவு செய்வதற்காக கூட்டுத்தாபனத்திற்கு மருந்துகள், பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் வழங்குனரிடமிருந்து பணமும் பொருட்களும் பெற்றுக்கொள்ளப்பட்டன என சான்றுகளின் பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அப்பணம் எதுவும் சுற்றுலா பயணத்திற்கு செலவு செய்யப்பட்டது என அல்லது ஒழுங்கீனங்கள் அல்லது மோசடிகள் இடம்பெறவில்லை என உறுதிப்படுத்துகின்ற எழுத்துமூல சான்றுகள் எதுவும் கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆம் ஆண்டின் போது கடந்த ஆண்டுகளில் பாதீட்டின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி எற்பாட்டினை தொடர்புபடுத்தி சுற்றுப் பயணம் ஒழுங்குபடுத்தப்பட்டது. | கொண்டு செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக சிறந்த கண்காணிப்பினையும் ஒழுக்கத்தையம் நிதி ஒழுங்கீனங்களையும் பேணுதல் வேண்டும். வழங்குனர்களிடமிருந்து பணமும் பொருட்களும் பெற்றுக்கொள்ளப்படவில்லை எனவும் ஒழுங்கீனங்களும் மோசடிகளும் இடம்பெறவில்லை எனவும் உறுதிப்படுத்துவதற்காக முறையான விசாரணைகளை நடாத்தி பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 நிதிகளின் குறைந்த பயன்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மூலதன மானியமாக பொதுத்திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 75,500,000 தொகையில் ரூபா 30,921,906 அல்லது 41 சதவீதம் 2023 யூன் 30 ஆந் திகதி வரையும் பயன்படுத்தப்படாது வங்கி கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | தற்பொழுது காணப்படுகின்ற திறைசேரி நிதி ஏற்பாட்டு மீதியானது சுவையான மருந்துக் களஞ்சியத்தை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடும் மின்பிறப்பாக்கி இயந்திரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடும் ஆகும். சுவையான மருந்து களஞ்சியத்தை நிர்மாணிப்பது சம்பந்தமாக உரிய ஒப்பந்த நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டு | கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றி நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய அத்தியவசியமான மற்றும் முன்னுரிமைச் செயற்திட்டங்களை மாத்திரம் திட்டமிட்டு அத்திட்டங்களை வெற்றிகரமாக அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாடு மாத்திரம் பொதுத்திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படு |

| | | | |
|---|---|---|---|
| | | வருவதுடன் மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | தல் வேண்டும். மிகுதியாகக் காணப்படுகின்ற மூலதன நிதி ஏற்பாடு தொடர்பாக செயற்திட்டத்தினை மீண்டும் மீளாய்வு செய்து அத்தியவசியமான செயற்பாடுகளை துரிதமாக முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டின் போது புதிய டீசல் மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை வழங்கி பொருத்தி செயற்படுத்துவதற்காக சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சினால் ரூபா 5 மில்லியன் வழங்கப்பட்டிருந்தும் 2023 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வரையும் அச்செயற்பாட்டிற்காக பணம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021, 2022 ஆம் ஆண்டுகளில் இரண்டு சந்தர்ப்பங்களின் போது மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு பெறுகை வழங்கப்பட்டிருந்த போதிலும் தொற்றுநோய் மற்றும் பொருளாதார சிக்கல் நிலைமையின் காரணமாக உருவாகிய வெளிநாட்டு நாணய பிரச்சினையால் வழங்குனர்களால் வழங்கல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தற்பொழுது மீண்டும் ஒரு தடவை 200 KVA இயலளவினைக் கொண்ட மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்காக பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2023 செப்தெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து 2023 ஆம் ஆண்டிற்கான கணக்குகளில் உரிய செம்மையாக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தினால் 111 சந்தர்ப்பங்களின் போது ரூபா 823,790 பெறுமதியான மருந்துகளை இலவசமாக வழங்கி அவற்றின் ரூபா 605,600 கிரயமானது அன்பளிப்பாக விற்பனைகள் மற்றும் பகிர்ந்தளித்தல் செலவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும் 2019 யூலை 08 ஆந் திகதிய 13406 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தின் பிரகாரம் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் வேண்டுதல்களைத் தவிர்த்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாத ரூபா 10,000 இற்கு மேற்பட்ட அன்பளிப்பிற்குரிய பணம் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய போதிலும் முன்னைய ஆண்டில் 14 சந்தர்ப்பங்களில் அத்தீர்மானத்திற்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 10,000 இனை மிகைத்த ரூபா 681,680 தொகையான அன்பளிப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 156(i) இன் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 14192 ஆம் இலக்க திர்மானத்தின் பிரகாரம் 2023 ஆம் ஆண்டிலிருந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2019 யூலை 08 ஆந் திகதிய 13406 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்காக மீண்டும் பணிப்பாளர் சபை பத்திரத்தினை அனுப்பிவைத்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | முறைப்படியாகத் திட்டமிடப்பட்ட சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களைத் தவிர்த்து விற்பனைக்காக மருந்துகள் இலவசமாக வழங்கப்படாதிருத்தல் வேண்டும். உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட திர்மானத்தின் அடிப்படையில் நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் அன்பளிப்புக்காக கூட்டுத்தாபனத்தின் வளங்கள் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். விற்பனைகளை தவிர்த்து வேறு எந்த வழிகளிலும் மேற்கொள்ளப்படுகின்ற மருந்துகளை வெளியாருக்கு வழங்குதல் சம்பந்தமாக செய்யப்பட வேண்டிய முறையான நடைமுறையினை அறிமுகப்படுத்தி பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறான வெளியாருக்கு வழங்குதல் தொடர்பான சிபாரிசுகள், அங்கீகாரம் மற்றும் மேற்பார்வைகளை உறுதியாகக் காட்டும் வகையில் |

| | | |
|---|---|---|
| | | பதிவேடுகளும் ஏடுகளும் பேணப்படுதல் வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் வழிகாட்டிகளின் பிரகாரம் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகள் காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை நடவடிக்கைகளை பட்டியல்படுத்தி பிரதான பெறுகைத் திட்டமும் ஒவ்வொரு பெறுகையின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரையான ஒவ்வொரு பெறுகைச் செயற்பாட்டின் கட்டங்களையும் காலரீதியாக விபரித்து பெறுகைக்கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் விபரமான பெறுகைத் திட்டம் 2023 ஆம் ஆண்டு தொடர்பாக தயாரிக்கப்படும். | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 2022 ஆம் ஆண்டின் உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தேயவைான 76 வகையான உலர்ந்த மற்றும் சுவையான மருந்து வகைகளில் 91,775 கிலோ கிராம்கள் 09 மாதங்களுக்காகவும் 06 வகையான எண்ணை மற்றும் திரவ வகைகளின் 107,287 கிலோ கிராம்கள் 06 மாத காலத்திற்காகவும் இறக்குமதி செய்வது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.13(ஆ) வழிகாட்டியின் பிரகாரம் கேள்வி விலையில் பிணை வைப்பினை வேண்டுதலானது கண்டிப்பாக அதைரியப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக இருந்த போதிலும் மேற்கூறிய பெறுகையின் போது கேள்வி ஆவணங்களின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் மொத்த கேள்வி விலையில் 05 சதவீதமான கேள்விப் பிணை வைப்புச் செய்யப்பட வேண்டும் எனக் காட்டியதன் மூலம் மேற்கூறிய 82 வகையான மருந்துகளில் ஒரு பகுதியையேனும் ஒப்பீட்டு ரீதியாக குறைந்த விலைக்கு வழங்குவதற்கு பெறுகைக்காக பங்குபற்றுவதற்கு இருந்த சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது பின்பற்றப்பட்ட பெறுகைத் தீர்மானத்தின் பிரகாரம் மற்றும் முன்மாதிரிரிகளை அடிப்படையாகக் கொண்டு விலைகளைக் கோரும் போது மொத்த கேள்விப் பெறுமதியில் 05 சதவீதம் கேள்விப் பிணையை வைப்பதற்கு தெரியப்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தும் நிகழ்கால பெறுகைக்குழு உற்பத்தி தேவைப்பாட்டிற்கு இணங்க பல சந்தர்ப்பங்களில் தனித்தனியாக விலை மனுக்களைக் கோருவதற்கும் கேள்வி பாதுகாப்பு பிணைக்காக சதவீதத்தினைக் காட்டாது | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கல் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு கேள்வி பாதுகாப்பு பிணையை பெற்றுக்கொள்வதற்கும் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. | |
| (ii) | பெறுகை அறிவுறுத்தல்களின் மூலம் வெளிநாட்டு வழங்குனர்கள் உற்பத்தியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட உள்நாட்டு முகவர்களால் சீல்வைக்கப்பட்ட விலை மனுக்கள் கோரப்பட்டிருந்தும் அதற்கு முரணாக மற்றும் கேள்வி பாதுகாப்பு பிணை இன்றி ஒரு உள்நாட்டு நிறுவனத்தின் விலை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களில் வெளிநாட:டு வழங்குனர்கள் CIF விலைக்கு ஐக்கிய அமெரிக்க டொலர்களிலும் உள்நாட்டு வழங்குனர்கள் கூட்டுத்தாபனம் வரை வழங்கல் விலைக்கு இலங்கை ரூபாக்களிலும் (LKR) விலை மனுக்கள் சமர்ப்பிக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்தும் மேற்கூறிய உள்நாட்டு நிறுவனம் கூட்டுத்தாபனம் வரை வழங்குவதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர்களில் விலை மனுக்களை சமர்ப்பித்திருந்தது. கேள்வி கோரும் ஆவணங்களில் நிர்ணயிக்கப்பட்டுள்ள விடயங்களுக்குப் புறம்பாக இருப்பதனால் அக்கேள்வி மனு நிராகரிக்கப்பட வேண்டிய போதிலும் நடைமுறைச் சாத்தியமான அடிப்படை மற்றும் வெளிப்படைத்தன்மை இன்றி மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு நடைமுறைகளினூடாக ஐக்கிய அமெரிக்க டொலர் 329,125.3 தொகையான 36 வகையான உலர்ந்த மருந்துகளும் எண்ணையும் மற்றும் திரவங்களின் 35,157.5 கிலோகிராம்களை இறக்குமதி செய்வதற்கு அந்த நிறுவனத்திற்கு கேள்வி வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க பெறுகை நடைமுறைகளின் மூலம் சான்றுபடுத்த வேண்டிய மதிப்பீடு செய்யும் மற்றும் தெரிவு செய்யும் நடைமுறையின் வெளிப்படைதன்மை மற்றும் சரியான | விலைமனுக்களைச் சமர்ப்பித்த 02 நிறுவனங்களான உள்நாட்டு நிறுவனமும் வெளிநாட்டு நிறுவனமும் விலைமனுக்களைக்களைத் திறக்கின்ற திகதியில் கேள்விப் பிணையை சமர்ப்பிக்காதிருந்தும் நாட்டில் காணப்பட்ட எதிர்ப்புக்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் கடமைகளை ஆரம்பித்த 2022 மே 17 ஆந் திகதி உரிய கேள்விப் பிணையானது வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு இறுதிக்கொள்வனவு விலையை ரூபா பெறுமதியுடன் ஒப்பீடு செய்வதற்காக வழங்குனரின் டொலர் பெறுமதி 2022 மே 17 இல் காணப்பட்ட பெறுமதிக்கு ரூபா பெறுமதியில் பரிமாற்றம் செய்யப்பட்டது. உள்நாட்டு வழங்குனருக்காக மருந்தின் பெறுமதியினை ரூபாவில் குறிப்பிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தும் உள்நாட்டு வழங்குனர் டொலர்களில் சமர்ப்பித்திருந்தார். 2022 யூன் 17 ஆந் திகதி நடைபெற்ற பெறுகைச் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விலைகளானது இரண்டு | பெறுகை நடைமுறைகளின் மூலம் மதிப்பீடு செய்யும் மற்றும் தெரிவு செய்யும் நடைமுறையின் வெளிப்படைதன்மையும் சரியான தன்மையும் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தன்மையை உறுதிப்படுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை எனவும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவும் பெறுகைக் குழுவும் மேற்கூறிய உள்நாட்டு நிறுவனம் சம்பந்தமாக விசேட கருசணையுடன் நடவடிக்கை எடுததிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது. | நிலைமைகளின் கீழ் காணப்பட்டதனால் சரியான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையை சமர்ப்பிக்குமாறு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. திருத்திய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கையின் பிரகாரம் பெறுகைச் சபை அங்கீகாரத்தினை வழங்கியுள்ளது. | |
| (இ) | ஆசிய நாடுகளில் காணப்பட்ட மரபுரீதியான மருந்துவ முறைமையினை ஒருங்கிணைத்து உள்நாட்டு மக்களுக்கு அதேபோல வெளிநாட்டவர்களுக்கு சுயவிருப்பில் பரிகாரத்தினையும் மருந்துகளையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் சர்வதேச மருத்துவ வலயத்தினை உருவாக்குவது சம்பந்தமான பெறுகை நடவடிக்கை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | செயற்திட்ட திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக விலைமனுக்களைக் கோரும் போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஆலோசகர்களைத் தெரிவுசெய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான வழிகாட்டிக் கோவையின் 3.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைக்கு தொடர்புபடுத்தும் நிபந்தனைகள் (Terms of Reference) (TOR) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 3.14.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரமை ஆலோசனை சேவைகளின் மொத்த கிரயம் ரூபா 10 மில்லியன் மிகைக்காதிருக்குமாயின் அரசாங்க நிறுவனத்திற்கு ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு முடியுமாக இருந்தும் தரைவரினால் பெறுகைச் சபையின் மேல் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கட்டிடக்கலை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நபருக்கு மொத்த நிர்மாணக் கிரயத்தில் 5 சதவீத்தினை செலுத்துவதற்கு உட்பட்டு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் போது நாவின்ன ஆயுர்வேத வலயத்தை பொது மக்களுக்காக திறக்கப்பட்ட ஒரு வலயமாக கவர்ச்சிகரமாக தயார்படுத்துவது சம்பந்தமாக நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன. திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் வேண்டிக் கொள்ளபப்பட்டது. Covid 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் அந்த நிறுவனம் முகங்கொடுத்துள்ள பல்வேறு விடயங்களைக் காட்டி எங்களால் வேண்டிக் கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தாமதிக்கப்பட்டதனால் | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஆலோசகர்களைத் தெரிவுசெய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துவதற்கான வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தொழில்சார் தகமைகளைக் கொண்ட நிறுவனங்களிடமிருந்தும் நபர்களிடமிருந்தும் முறைப்படியாக சேவைக் கட்டணத்தை விசாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து திட்டத்தினையும் மதிப்பீட்டினையும் தயாரிப்பதற்கு அந்த நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | |
| (ii) | ஏதாவது ஒரு கேள்வி மனுவின் செல்லுபடியாகும் தன்மை மற்றும் பதிலளிக்கும் தன்மையை ஏற்றுக்கொள்வதற்கு தேவைப்படுவதானது நிபந்தகைகள் கேள்விகோரும் ஆவணங்களில் தெளிவாக நிர்ணயிப்பதற்கு தொழில்நுட்ப ரீதியான மற்றும் நிதி ரீதியான பிரேரணைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் ஆலோசனை சேவைகளை வழங்கின்ற 11 நிறுவனங்களுக்கு விலைமனுக்களை கோரும் அறிவித்தல் மாத்திரம் அனுப்பிகைக்கப்பட்டு விலைமனுக்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கிணங்க 04 ஆலோசனை நிறுவனங்கள் கேள்வி மனுக்களை சமர்ப்பித்திருந்ததுடன் மேற்கூறிய வழிகாட்டிக் கோவையின் 6.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் வெற்றியடைந்த கேள்வி மக்களை தெரிவுசெய்வதற்காக நியாயமான ஒப்பீடுகள் மற்றும் நடைமுறைகளை கேள்விதாரர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் தமது விருப்பிற்கு இணங்க தீர்மானித்த 05 கேள்வி மதிப்பீட்டு கருதுகோளின் பிரகாரம் கேள்வி மதிப்பீடு செய்யப்பட்டது. அதற்கிணங்க பெறுகை நடைமுறைகளின் மூலம் சான்றுபடுத்த வேண்டிய மதிப்பீட்டின் மற்றும் தெரிவு செய்யும் நடைமுறையின் வெளிப்படைத் தன்மையும் சரியான தன்மையும் சான்றுபடுத்தப்பட்டிருக்கவில்லை. | 11 ஆலோசனை நிறுவனங்களால் சேவைக்கட்டணங்களைக் கோரி சமர்பித்த 04 விலைமனுக்கள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த விலைமனுக்களை கோரும் போது கருதுகோல் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்திட்ட செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் உரிய அறிவித்தலில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக தகவல்களை விசாரித்த நிறுவனத்திற்கு அவை சம்பந்தமான தகவல்களும் நிலையப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. | பெறுகை நடைமுறைகளின் மூலம் மதிப்பீடு செய்தல் மற்றும் தெரிவுசெய்தல் நடைமுறையின் வெளிப்படைதன்மையும் சரியான தன்மையும் சான்றுபடுத்தப்படுதல் வேண்டும். |
| (iii) | ரூபா 100 மில்லியன் தொகையான மொத்த செயற்திட்ட கிரயத்தில் ரூபா | தேசிய திட்ட அமுலாக்கல் திணைக்களத்திற்கு | அங்கீகாரம் மற்றும் நிதி |

| | | | |
|---|---|---|---|
| | 40 மில்லியன் திறைசேரி நிதி ஏற்பாட்டின் மூலமும் ரூபா 60 மில்லியன் கூட்டுத்தாபனத்தினால் செலவு செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டிருந்தும் அதற்காக திஷறைசேரியின் அங்கீகாரத்தின் பங்களிப்புக்காகவும் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை வேலையை ஆரம்பிப்பதற்கு எந்த ஆயத்தமும் இல்லாதிருந்த இந்த செயற்திட்டத்திற்கான மொத்த கிரய மதிப்பீடேனும் தயாரிக்காது அரசாங்கத்தின் ஆலோசனைகளை தெரிவுசெய்யும் மற்றும் சேவையில் ஈடுபடுத்தும் கோவையின் வழிகாட்களுக்கு முரணாக முறையற்ற வகையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட திட்டமிடல் தொழில்நுட்பவியலாளருக்கு ரூபா 02 மில்லியன் செலுத்தப்பட்டது. | செயற்திட்டத்தினை சமர்ப்பிக்கும் படிவத்திற்கு இணங்க செயற்திட்ட அறிக்கையை தயாரித்து இராஜாங்க அமைச்சினால் சிபாரிசு செய்து பொதுத்திறைசேரிக்கு அனுப்பிவைத்து அது தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தும் உரிய நிதி கிடைக்கவில்லை. நிர்மாணக் கிரயம் ரூபா 100 மில்லியன் மற்றும் ஏனைய கிரயங்களையும் உள்ளடக்கி 2023 ஆம் ஆண்டிற்கான மூலதன பாதீட்டு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தும் அங்கீகாரம் அல்லது நிதி ஏற்பாடு வழங்கப்படவில்லை. 2024 ஆம் ஆண்டிற்கான மூலதன பாதீட்டு பிரேரணையின் கீழும் இச்செயற்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | ஏற்பாடு இல்லாது செலவு செய்வது சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மருந்துக் கூட்டுத்தாபனம் உற்பத்திசெய்கின்ற ஆயுர்வேத மருந்துகளை பகிர்ந்தளித்தல் மற்றும் பிரதான நகரங்களில் மருந்து விற்பனை நிலையங்களைப் பேணுவதற்காக மீளாய்வாண்டின் போது விற்பனை முகவர்களை நியமிப்பது தொடர்பான பெறுகை நடைமுறைகள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | தேசிய ரீதியாக பகிரங்கப்படுத்த வேண்டிய இப்பெறுகைகள் தொடர்பான அறிவித்தல் சம்பந்தமாக அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.2.2.(அ) வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக உரிய விண்ணப்ப படிவங்களை கோருதலானது கூட்டுத்தாபனத்தின் இணையதளம் மற்றும் பேஸ்புக் கணக்கில் அறிவித்தல்கள் வெளியிடுவதன் மூலம் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | முதலாவது கட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட விற்பனை முகவர்களைத் தெரிவுசெய்தலானது செலவினைக் குறைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் இணைய தளத்திலும் பேஸ்புக் பக்கத்திலும் பகிரங்கப்படுத்தப்பட்டு விண்ணப்பங்கள் கோருதல் இடம்பெற்றிருந்தது. 14226 ஆம் இலக்க பணிப்பாளர் சபைத் தீர்மானத்தில் வழங்கப்பட்டுள்ள | பெறுகை வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | 2022 யூலை 19 ஆந் திகதிய 14226 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் சந்தைப்படுத்தல் முகவர்களால் ரூபா 700,000 வங்கிப் பிணை மற்றும் ரூபா 300,000 கடன் பாதகாப்பு நிதி நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனம் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது 15 முகவர்களுக்கு முகவராண்மை வழங்கியிருந்தது. | சில விற்பனை முகவர்கள் ரூபா 300,000 கடன் பாதுகாப்பு நிதியை மாத்திரம் சமர்ப்பித்து முகவராண்மையில் செயற்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. பாதுகாப்பு எல்லையினை மிகைக்கின்ற சந்தர்ப்பங்களில் கைக்காசிற்கு கொள்வனவு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும் இலக்கிடப்பட்ட விற்பனைகளை அடைந்துகொள்வதற்காக முழுமையாக நிபந்தனைகளை அடைந்துகொள்ளல் அத்தியவசியமானதால் அது தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பெறுகை வழிகாட்டிகள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கைக்கு முரணாக நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |
| (iii) | அரசாங்க துறை மற்றும் தனியார் துறைக்கான விற்பனைக்குச் சேர்த்தக்கொள்ளப்பட்ட கழிவு எல்லையையும் மிகைத்து தனியார் துறையின் விற்பனை முகவர்களுக்கு ரூபா 500,000 இற்கு மேற்பட்ட கொள்வனவுகளுக்காக 33 சதவீதத்திலிருந்து 40 சதவீதம் வரையான கழிவு வழங்கியதனால் 25 சதவீதமான கூட்டுத்தாபனத்தின் இலாப எல்லையானது 03 சதவீதம், 05 சதவீதம், 07 சதவீதம் அல்லது 10 சதவீதம் முதலியவாறாக 15 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க சாதாரண பாவனையாளர்களுக்கு வழங்கக் கூடியதாகவிருந்த விலை நிவாரணத்தை தனியார் விற்பனை முகவர்களுக்கு வழங்குவதற்கும் அரசாங்க நிறுவனங்களுக்கு அச்சந்தர்ப்பத்தினை வழங்காதிருப்பதற்கும் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தது. | மாவட்ட விற்பனை முகவர்களால் கூட்டுத்தாபன உற்பத்திப் பொருட்களை எடுத்துச் செல்லல், பகிர்ந்தளித்தல், மேம்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல் தொடர்பான அனைத்து செயற்பாட்டு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் 40 சதவீதம் வரையான கழிவு சதவீதம் அமுல்ப்படுத்தப்பட்டது. அரசாங்க துறைக்காக 30 சதவீதத்தினை மிகைத்த கழிவுடன் அந்த உற்பத்திப் பொருட்கள் தொடர்பான வைத்தியசாலைகள், மருந்தகங்களுக்கு எடுத்துச் செல்வதற்கும் | கூட்டுத்தாபனத்தின் இலாபனத்தன்மைக்கும் அரசாங்கத்தின் நிதிக்கும் நட்டத்தை ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகளை அதைரியப்படுத்துதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டின் போது நியமிக்கப்பட்ட நிலைய மற்றும் இணைய வழிப்படுத்தப்பட்ட விற்பனை முகவர்களுக்கு வழங்கப்படுகின்ற உச்ச அளவு கழிவு சதவீதம் 27 சதவீதம் வரை குறைக்கப்பட்டுள்ளது. | |
| (உ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.6.3 ஆம் வழிகாட்டிக்கு முரணாக மருந்து மூலப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது நியம தரத்தினை கவனத்தில் கொள்ளாமை மற்றும் நியமம் சம்பந்தமாக போதியளவு கவனம் செலுத்தியிருக்காமையின் மூலம் சில வழங்குனர்களுக்கு சாதகமான வகையில் பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பம் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (i) ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நிறுவனத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட நியமம் சம்பந்தமான ஆய்வுகூட அறிக்கையினைப் பெற்றுக்கொள்ளாது மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதம் ரூபா 2,840,000 தொகையான 100 கிலோகிராம் சுவைத்திரவம் (ஆசுத்த) கொள்வனவு செய்யப்பட்டது. | சுவைத்திரவத்தினைப் பெற்றுக்கொள்ளும் போது இக்கூட்டுத்தாபனத்தினால் வைத்தியர்களின் சிபாரிசின் அடிப்படையில் மாத்திரம் கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. சுவைத்திரவம் சம்பந்தமான ஆய்வுகூட பரிசோதனையானது ஒரு சிக்கலான நடைமுறையாக இருப்பதனால் அதற்காக கூட்டுத்தாபனத்தின் உரிய ஆய்வுகூட வசதிகள் இருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.6.3 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நியம தரம் அற்றது என தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் கூட்டுத்தாபனத்தின் ஆயுர்வேத வைத்தியரின் சிபாரிசினைப் பெற்று மீளாய்வாண்டின் சனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் ரூபா 1,462,500 தொகைக்கு 1,500 கிலோகிராம் தேன் ரூபா 3,784,500 தொகைக்கு 15,036 கிலோகிராம் எண்ணை மற்றும் ரூபா 2,810,475 தொகைக்கு 3,507 கிலோகிராம் தேன் மெளுகு என்பன கொள்வனவு | தேன், எண்ணை வகைகளை கொள்வனவு செய்வது தொடர்பாக வழங்குனர்கள் விலை மனுக்களைச் சமர்ப்பிக்கும் போது மாதிரிகளைப் பெற்று அந்த மாதிரிகளை ஆய்வு கூடத்திற்கு அனுப்பி நிறம், சுவை முதலியன அவர்களினால் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு ஏனைய விடயங்களையும் | பெறுகை நடைமுறைகளின் மூலம் மதிப்பீடு செய்தல் மற்றும் தெரிவுசெய்தல் நடைமுறையின் வெளிப்படைதன்மை மற்றும் சரியான தன்மை சான்றுபடுத்தப்ப |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டது. | கவனத்தில் கொண்டு வைத்தியர்களின் அறிக்கையையும் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தேன் மற்றும் எண்ணை வகைகள் முதலிய திரவத்தன்மையான மூலப்பொருட்கள் தொடர்பான ஆய்வுகூட அறிக்கையினையும் வைத்தியர்களின் அறிக்கையினையும் ஒப்பீடு செய்யாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் இரு தரப்பினர்களாலும் கலந்துரையாடி மூலப் பொருட்களின் தரம் மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக காணப்படுகின்ற மூலப்பொருட்களின் தேவைப்பாட்டினை கவனத்தில் கொண்டு வைத்தியர்களின் சிபாரிசின் அடிப்படையில் உரிய கொள்வனவினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | டுதல் வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டில் மற்றும் மீளாய்வாண்டில் 06 சந்தர்ப்பங்களின் போது தம்பான ஆதிவாசிகள் கிராமம் மற்றும் மஹியங்கனைக்கு அருகாமையிலுள்ள பிரதேசங்களுக்குச் சென்று பெறுகை நடவடிக்கைகளுக்கு புறம்பாக உலர்ந்த மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்காக மொத்தமாக ரூபா 6,000,000 முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க எழுத்துமூல வேண்டுதல் மற்றும் செலவு மதிப்பீடு இல்லாது ஒரு தடவையில் 05 இற்கும் 12 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான உத்தியோகத்தர்கள் ரூபா 100,000 வீதம் முற்பண வவுச்சர்களைத் தயாரித்து அந்த வவுச்சர்களுக்குரிய அனைத்து முற்பணங்களையும் நிதி உதவியாளர் கையில் | 13936 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் கீழ் மஹியங்கனைக்கு அருகாமையிலுள்ள மற்றும் தம்பான ஆதிவாசிகளினால் சேகரிக்கப்பட்டுள்ள மருந்துகள் கொள்வனவு செய்தல் நடவடிக்கையை மேற்கொள்ளும் போது அது தொடர்பான உத்தியோகத்தர்கள் பங்குபற்றியுள்ளதுடன் தம்பான ஆதி வாசிகளிடமிருந்து | உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்களை வழங்குவது சம்பந்தமாக காணப்படுகின்ற பிரமாணங்களுக்கும் பெறுகை வழிகாட்டிகளுக்கும் இணங்க மருந்துகளை கொள்வனவு செய்தலினை மேற்கொண்டு மோசடிகள் மற்றும் |

| | | |
|---|---|---|
| பெற்றுக்கொண்டு தலைவர் உள்ளடங்கலாக சில உத்தியோகத்தர்களுடன் சென்று தம்பான ஆதி வாசிகளிடமும் அப்பிரதேசத்திலுள்ள ஏனைய வழங்குனர்களிடமிருந்து மேலும் ஒவ்வொரு முகாமையாளருக்கு தனித்தனியாக முற்பணங்களை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது ஒரு நாட்குறிப்பு வவுச்சரின் மூலம் பெறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தரின் அங்கீகாரமின்றி உரிய முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட்டிருந்தன. | கைக்காசுக்கு கொள்வனவு செய்தலினை மேற்கொள்ள வேண்டி இருந்ததனால் இவ்வாறு சில உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் வழங்கப்பட்டு கொள்வனவு செய்தல் நடவடிக்கை இடம்பெற்றது. அவ்வாறே பின்னைய காலங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட முற்பணம் காசாளருக்கு வழங்கப்பட்டு அத்தொகைக்குரிய வழிக்காசு காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட்டு மருந்து மூலம் பொருட்களை கொள்வனவு செய்யும் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. | பிழைகள் இடம்பெறும் வாய்ப்புக்களை த் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.6 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நோயாளிகளின் சுவை மருந்து தேவைப்பாட்டினை நிறைவேற்றும் மற்றும் நோயற்ற சமூகத்தை கட்டியெழுப்பும் குறிக்கோளில் ரூபா 45,725,759 மதிப்பீட்டு கிரயத்துடன் சுவை மருந்து உற்பத்திச்சாலையை நிர்மாணிக்கும் செயற்திட்டம் ரூபா 37,000,000 திறைசேரி நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் 2018 ஆகஸ்ட் 25 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2020 சனவரி 02 ஆந் திகதி வரை ரூபா 12,144,400 செலவு செய்து நிர்மாண வேலைகளில் 30 சதவிதம் பூர்த்திசெய்யப்பட்டிருந்தும் திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பலவீனத்தின் காரணமாக அத்திகதியிலிருந்து நிர்மாண வேலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் 05 ஆண்டுகளை மிகைத்திருந்த போதிலும் உரிய நிர்மாண வேலைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க அச்செயற்திட்டத்திற்காக அதுவரை செய்யப்பட்ட செலவுகள் சிக்கனமற்றதாக மாறியிருந்ததுடன் ஒப்பந்தக் கிரயம் ரூபா 58,940,280 வரை ரூபா 25,431,163 ஆல் அதாவது 75.89 சதவீத்தினால் | இந்த சுவை மருந்துக் களஞ்சியத்தை நிர்மாணிக்கும் வேலைகளை மேற்கொள்வதற்கான கிரயத்தை குறைக்கும் வகையில் நடவடிக்கை எடுப்பதற்கும் கட்டிடத்தின் இடவசதிகளை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கும் முடியுமான வகையில் திட்டமிடப்பட வேண்டிய திருத்தங்கள் சம்பந்தமாக நிர்மாண ஆலோசனை நிறுவனமான அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடப்பட்டது. அதற்கிணங்க இந்த நிறுவனம் திருத்திய திட்டத்தினை சமர்ப்பித்துள்ளதுடன் அது தொடர்பாக நிர்மாண ஒபபந்தக்காரருடன் கலந்துரையாடி | செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பித்து செயற்திட்டத்தை பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| அதிகரித்திருந்தது. | செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | |

### 3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரித்த பதவியணியினர் 375 ஆக இருந்த போதிலும் அத்திகியில் உள்ளவாறான உள்ளபடியான பதவியணியினர் 308 ஆக இருந்ததனால் அங்கீகரித்த பதவியணியில் 18 சதவீதத்திற்குச் சமமான வெற்றிடங்களின் எண்ணிக்கை 67 ஆகும். | தற்பொழுது காணப்படுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கை 40 ஆக உள்ளது எனவும் இந்த வெற்றிடங்களை பூரணப்படுத்துவதற்காக நிதி அமைச்சின் அங்கீகாரமும் தேசிய தேர்தல்கள் அலுவலகத்தின் அனுமதியும் பெற்றுக்கொள்ளப்பட்டு மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கூட்டுத்தாபனத்தின் அங்கீகரித்த பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி நிகழ்காலத்திற்கு பொருந்தும் வகையில் மீளாய்வு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 09 சேவைத் தரங்களின் கீழ் கூட்டுத்தாபனத்திற்காக திருத்திய ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அச்சேவைத் தரங்களுக்கு உட்பட்ட பதவிகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து உத்தியோகத்தர்களும் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிட்டவாறு வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடாத்தப்படாது சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். மேலும் சேவையில் நிரந்தரமாக்கும் போது மூன்றாடம் தரப்பினர்களினூடாக தகமைகளை உறுதிப்படுத்துவதற்கும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டனர் என்பதற்கு தனிப்பட்ட கோவைக்கான ஒரு பிரதியுடன் ஒரு கடிதத்தினை வழங்குவதற்கும் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் அங்கீகரித்த ஆட்சேரப்பு நடைமுறையின் பிரகாரம் ஆரம்ப சேவை தரத்திலுள்ள பதவிகளுக்காக 2023 ஆம் ஆண்டின் போது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடாத்தி முடிவடைந்துள்ளதுடன் முகாமைத்துவ உதவியாளர் சேவைத் தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட சேவைதரங்களுக்காக 2023 நவம்பர் மாதம் இறுதியளவில் பரீட்சைகளை நடாத்துவதற்கு ஒழுங்குவிதிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. ஊழியர்களை நிரந்தரமாக்கும் போது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையினை பூரணப்படுத்துதல் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சேவையில் நிரந்தரமாக்கும் போது மூன்றாம் தரப்பினர்களினூடாக தகமைகளை உறுதிப்படுத்துதலும் தனிப்பட்ட | உரிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை முறைப்படியாக நடாத்துவதற்கும் சேவையில் நிரந்தரமாக்கும் போது மூன்றாம் தரப்பினரினூடாக தகமைகளை உறுதிப்படுத்துவதற்கும் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டது என்பதனை தனிப்பட்ட கோவைக்கான ஒரு பிரதியுடன் ஒரு கடிதத்தினை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | கோவைகளுக்கான ஒரு பிரதியுடன் சேவையில் நிரந்தரமாக்கும் கடிதத்தினை வழங்குதலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க தொழில்முயற்சிகள் செயற்பாட்டுக் கையேட்டின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களையும் வரைபு அறிக்கையினையும் சமர்ப்பிப்பதற்கு 192 நாட்கள் எடுத்திருந்தன. | 2022 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரித்து இக்கணக்குகள் பணிப்பாளர் சபைக்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் பல சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்ய வேண்டி ஏற்பட்டது. தற்பொழுது 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கை வரைபாக்கப்பட்டுள்ளது. வருடாந்த கணக்காய்வு அறிக்கை கிடைத்ததன் பின்னர் ஆண்டறிக்கை சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | எந்த ஒரு நிதி ஆண்டும் முடிவடைந்து 60 நாட்களுகுள் அரசாங்க கூட்டுத்தாபனங்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்களையும் வரைபு ஆண்டறிக்கையையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலதன செயற்பாடுகளின் கீழ் திறைசேரி நிதி ஏற்பாட்டுடன் ரூபா 200 மில்லியனான 10 மூலதன செயற்பாடுகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய மூலதன செயற்பாடுகள் எதுவும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. கூடட:டுத்தாபனத்தின் நிதியிலிருந்து நிறைவேற்றப்பட்ட மூலதன செயற்பாடுகளுக்கு செலவு செய்யப்பட்ட ரூபா 63.20 மில்லியன் மற்றும் உள்நாட்டு மருத்துவத்தினை மேம்படுத்துதல், கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகளை அபிவிருத்தி | 2022 ஆம் ஆண்டிற்கான மூலதன பாதீட்டினைத் தயாரித்து அமைச்சின் சிபாரிசுடன் நிதி அமைச்சிற்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தும் உரிய நிதி ஏற்பாடு கிடைக்கவில்லை. கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்ற நிதி ஏற்பாட:டு நிலைமை மற்றும் நடவடிக்கைகளின் முன்னுரிமையை கருத்தில் கொண்டு அத்தியவசியமான மூலதன செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வன | வருடாந்த செய்நடவடிக்கைத் திட்டத்தினை முடியுமான அளவிற்கு நடைமுறைச் சாத்தியமாக தயாரிக்க வேண்டியதுடன் அதில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகளின் செயல் முன்னேற்றம் சம்பந்தமாக அதிக கவனத்துடன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்தல் மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சின் மூலம் நிகவெரடிய மற்றும் அம்பன்பொல மருதத்துவ பூங்காக்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 02 மில்லியன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க திட்டமிடப்பட்ட 36 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களில் 19 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் மாத்திரம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் அவற்றில் 17 அதாவது 47 சதவீதமானவை பௌதீக செயல்முன்னேற்றதினை அடைந்து கொண்டிருக்கவில்லை. | சீவராசிகள் வன பாதுகாப்பு அமைச்சு நிதி ஏற்பாட்டின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,000,000 இல் நிக வெரடிய மற்றும் அம்பன்பொல மருந்துப் பூங்காக்களின் தெரிவுசெய்த அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கூறிய நிதி ஏற்பாடானது துரித நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பெற்ற மேலதிக நிதி ஏற்பாடு என்பதனால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை. | |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையின் 4(அ) , (இ) மற்றும் (ஈ) பந்திகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் தாபன கட்டமைப்பு, அங்கீகரித்த மற்றும் தற்பொழுது உள்ள பதவியணியினர், பாதீட்டு முன்னுரிமைக்கு இணங்க தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டம், கால அட்டவணை, எதிர்பார்த்த வெளியீடுகள் என்பன உள்ளடக்கப்படவில்லை. | அடுத்துவரும் காலங்களில் செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4.3 பாதீட்டு கட்டுப்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 11 செலவு விடயங்களின் மீண்டுவரும் செலவுக்கான மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை மீகைத்து உள்ளபடியான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அவை 23 சதவீதத்திலிருந்து 161 சதவீதம் வரையான வீச்சில் பரவிக் காணப்பட்டது. மேலும் | அனைத்து பிரிவுகளிலிருந்தும் தகவல்களைப் பெற்று பாதீட்டு அறிக்கை தயாரிக்கப்படுவதுடன் முகாமைத்துவத்தினால் எடுக்கப்படுகின்ற தீர்மானத்தின் அடிப்படையில் ஒவ்வொரு சந்தர்ப்பங்களின் போதும் | பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மூலதன செலவு விடயத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டினை மிகைத்து உள்ளபடியான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அது 61 சதவீதமாக இருந்தது. புதிய பயிர்சார்ந்த உற்பத்திசாலைக்குரிய பாதீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு ரூபா 250,000 ஆக இருந்தும் உள்ளபடியான செலவு ரூபா 4,071,312 ஆக இருந்ததனால் அந்த நிதி ஏற்பாடு முறைப்படியாக நடைமுறைச் சாத்தியமாகவும் ஆழ்ந்த அறிவுடனும் மீளாய்வு செய்யப்பட்டாது மதிப்பீடு தயாரிக்கப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்ப ட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | தேவைப்பாட்டினைக் கவனத்தில் கொண்டு உரிய அங்கீகாரத்தின் கீழ் சில செலவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கிணங்க பாதீட்டு நிதி ஏற்பாடு மிகைக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தின் வருமான மதிப்பீட்டினையும் செலவு மதிப்பீட்டினையும் தயாரிக்கும் போது வருமானம், வருமான செலவுகள் மற்றும் மூலதன செலவுகளை வகைப்படுத்துவதற்காக நியமப்படுத்தப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியீட்டு இலக்கங்கள் மற்றும் செயற்பாட்டு விபரங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் தரப்படவில்லை. | சரியான வகைப்படுத்தலுடன் வருமான செலவுகளை கணக்கீடு செய்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட குறியீட்டு இலக்கங்களும் செயற்பாட்டு விபரங்களும் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

## 4.4 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சிநிரலின்’’ பிரகாரம் ஒவ்வொரு அரசாங்க நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனம் தமது விடயப்பரப்பிற்கு கீழ் கொண்டுவரப்பட்டுள்ள செயற்பாடுகள் சம்பந்தமாக | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிக்ழ்ச்நிரலின் பிரகாரம் வறுமையற்று இருத்தல், பட்டினியை ஒழித்தல், சுகதேகி மற்றும் நலன்வாய்த்திருத்தல் பொருத்தமான செயற்பணி மற்றும் பொருளாதார முன்னேற்றம், பொறுப்பு | நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்வது தொடர்பான இலக்குகள், குறிகாட்டிகளை இனங்காண்பதற்கு மற்றும் செயல் முன்னேற்றத்தை அளவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |

அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமா என்பது தொடர்பாக போதியளவு புரிந்துணர்வுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.
அதற்கிணங்க ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சிநிரலின் பிரகாரம் நிறுவனத்தின் செயற்பாட்டுடன் தொடர்புபட்ட நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்துகொள்ள வேண்டிய நிலைகளையும் இலக்குகளின் அடிப்படையில் அடைந்து கொள்வதனை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வாய்ந்த பயன்பாடும் உற்பத்தியும் ஆகிய விடயங்கள் தொடர்பாக 2023-2027 காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தினை தயாரிக்கும் போதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போதும் கவனம் செலுத்தப்பட்டது.

வேண்டும்.